
# திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 12



# உப்பு மண்டியில் திருடினால்....!

கல்கத்தாவில், பெரிய அதிகாரி ஒருவர்—அவர்மீது 'இலஞ்சம்' பெற்றதாகப் புகார் கிளம்பிற்று—ஸ்பெஷல் போலீசார் விசாரணை நடத்தினர். இலாகாவிலும் விசாரணை நடைபெற்றது-நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இப்போது அந்த அதிகாரி, எங்கே இருக்கிறார், தெரியுமோ!

இது தெரியாதா, சிறையில் தள்ளி இருப்பார்கள்; அல்லது வேலையை இழந்துவிட்டு வீட்டில் விசாரத்தோடு உட்கார்ந்துகொண்டிருப்பார் என்று சொல்வீர்கள்.

சாதாரண இராஜ்யத்தில் அப்படித்தான் நடைபெறும்.

ஆனால் இது சாதாரண இராஜ்யமல்லவே! இராமராஜ்யம்!! கவனமிருக்கிறதல்லவா! இராமராஜ்யம். எனவே, கரைபட்ட அந்த அதிகாரி இப்போது கல்கத்தாவில் இல்லை, டில்லியில் பெரிய உத்யோகத்தில் இருக்கிறார்!!

இப்படிப்பட்டவருக்கு டில்லி சர்க்கார் வேலை கொடுத்தது நியாயமா என்று முகர்ஜி எனும் பார்லிமெண்ட் உறுப்பினர் கேட்டார், மந்திரி, கல்கத்தாவில் அவர் பார்த்த 'வேலை' வேறு, இங்கே டில்லியில் வேறு இலாகாவில் வேலை பார்க்கிறார் என்று பதிலளித்தார்!

நீதியின் கதி எப்படி இருக்கிறது என்பதற்கு நேர்த்தியான எடுத்துக்காட்டு!

கல்கத்தாவில், இந்த அதிகாரி மீது புகார் காட்டி, விசாரணை நடக்கும்படி செய்தவர்கள் முகத்தில் கரி பூசப்பட்டுவிட்டது.

ஒரு பெரிய அதிகாரிமீது குற்றம் சாட்டவே பலருக்குத் தைரியம்வராது, சாட்சிகள் மறையும், ரிகார்டுகள் தீக்கிரையாகும்.

யாரோ, துணிந்து, நீதி நிலைக்கட்டும் என்று தகவல்களைத் திரட்டித் தந்தனர்.

ஒரு பெரிய அதிகாரி மீது, புகார் கூறினாலே, போதும், அந்த அதிகாரிகளும், கூறினவர்கள் மீது பாய்வர், பகை கக்குவர், அழித்துவிடச் சகல ஆயுதங்களையும் பயன்படுத்துவர்.

இவ்வளவுக்கும் துணிந்துதான் 'புகார்' கூறி, விசாரணை நடைபெறும் நிலை பிறந்தது.

ஸ்பெஷல் போலீசால் விசாரணை நடைபெற்று, இலாகாவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நிலையில், டில்லியில், அந்த அதிகாரிக்கு, பெரிய வேலை கொடுத்தார்கள் என்றால், புகார் கூறினவர்கள், விசாரணை நடத்தினவர்கள் ஆகியோருக்கு எவ்வளவு அவமானம் ஏற்பட்டிருக்கும்—எவ்வளவு கேலி செய்திருப்பார்கள் —இலஞ்சம் வாங்கும் அதிகாரிகள் எத்துணை துணிவு பெற்றுவிடுவார்கள்; இந்தச் சம்பவம் கண்ட பிறகு, யாராவது, அதிகாரிகள் மீது 'தவறுகள்' இருப்பதைக் கண்டு பிடித்துக் கூறத்தான் முன்வருவார்களா?

கல்கத்தாவில் கரைபட்ட அதிகாரியை, டில்லி சர்க்கார் பெரிய வேலையில் அமர்த்திக் கொண்டது நியாயமா என்று பொறுப்புள்ள பார்லிமெண்ட் உறுப்பினர் கேட்கிறார், எவ்வளவு பொறுப்பற்ற பதில் கிடைக்கிறது, அமைச்சரிடமிருந்து!

"புகார்களுக்குத் துளியும் ஆதாரமில்லை! வேண்டுமென்றே யாரோ விஷமக்காரர்கள் கட்டிவிட்ட பொய் என்பது சர்க்காருக்குத் தெரிந்துவிட்டது; மாசு மருவற்றவர் அந்த அதிகாரி என்பது தெரிந்ததால்தான், அவருக்கு டில்லியில் வேலை கொடுத்திருக்கிறோம்" என்று அமைச்சர் சொல்லவில்லை.

கல்கத்தாவில், அந்த அதிகாரி பார்த்துவந்த வேலை வேறு, டில்லியில் தரப்பட்டுள்ள வேலை வேறு என்று கூறுகிறார்.

உப்பு மண்டியில் திருடினவனுக்கு பருப்பு மண்டியிலே வேலை கொடுக்கலாம் போலும்!!

'இலஞ்ச'க் குற்றம், மற்ற மற்ற ஜனநாயக நாடுகளிலே எவ்வளவு கடுமையாகத் தண்டிக்கப்படுகிறது, என்பதை அனைவரும் அறிவர்.

ஒரு ஆட்சியின், யோக்யதையே இலஞ்சம் முதலிய குற்றங்களைக் களைவதிலே, அது காட்டும் அக்கரை நேர்மை, இவைகளைப் பொறுத்து, அங்கெல்லாம் மதிப்பிடப்படுகிறது.

சைனாவில் முடிசூடா மன்னராகத்தான், சியாங்கே ஷேக்கைக் கொண்டாடி வந்தார்கள்.

ஜப்பானிய ஆதிக்கத்தை எதிர்த்த வீரர் சீனநாட்டை விடுவித்த தீரர் என்றெல்லாம் புகழ்பாடினர்; ஆனால் அவருடைய ஆட்சியிலே அதிகாரிகள் அடித்த கொள்ளையும், நிர்வாகத்திலே ஏற்பட்ட ஊழலும் கிளப்பிய நாற்றம், சியாங்கை, பார்மோசா ஓடி ஒளியும் அளவுக்குத் துரத்திவிட்டது.

இங்கு, கல்கத்தாவில், கண் விழிப்போடு இருக்கிறார்கள், டில்லிக்கு வந்து விடுங்கள், என்று அழைப்பது போல, கல்கத்தாவில் கண்காணிப்புக்கு ஆளான, கரைபட்ட அதிகாரிக்கு, டில்லியில் வேலை தருகிறது, சர்க்கார்!

சர்க்காரின் போக்கு இவ்விதமிருந்தால், எந்தப் போலீஸ் அதிகாரிதான், இனி நியாயம் காப்பாற்றப்படும் என்ற தைரியத்துடன், இலஞ்சப்புகார்களை விசாரணை நடத்த முனைவார்!

சர்க்கார்தான், உப்பு மண்டியில் திருடுபவனுக்கு, பருப்பு மண்டியில் வேலை தரலாம், என்ற போக்கில் நடந்து கொள்கிறதே!!

திறமைக்குறைவானவர்கள், திருட்டுப்பழக்கமுடையவர்கள், 'பந்து மித்திரர்களுக்கு' இலாபம் தேடித் தருபவர்கள், ஆகியோரை அடக்கும் அறிவாற்றல் இல்லாத ஆட்சி, மக்களுக்கு மாபெரும் துரோகம் செய்கிறது என்றுதான் பொருள். ஏழைமக்களின் வரிப் பணத்தை, அவர்கள் அழ அழப் பறித்துக் குவித்துக் கொண்டு, அகப்பட்டவரையில் சுருட்டும் பேர்வழிகளிடம் ஒப்படைக்கும் செயலைச் செய்யும் சர்க்காரை, இந்த நாட்டில் தவிர வேறு எங்கும் மக்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்!

சர்க்காரின் மூலம், கடன்தொகையும், உதவித்தொகையும் பெற்றும், உருத்தெரியாமல் போய்விட்ட சோடேபூர் கண்ணாடி தொழிற்சாலை நிர்வாக அதிகாரி, திறமைக் குறைவானவர், அல்லது அக்கரை அற்றவர்; அல்லது கூடிக் குடிகெடுத்தவர் என்று எவரும் கூறத்தக்க நிலையில் நடந்துகொண்டதால், சோடேபூர் தொழிற்சாலை துவண்டு போயிற்று. சர்க்கார் என்ன செய்தது? மக்கள் சர்க்கார்! அந்த அதிகாரிக்கு, மேலும் ஒரு ஆறுமாதம் வேலைகொடுத்ததாம்—நற்சாட்சிப் பத்திரமும் வழங்கிற்றாம்!!

டில்லியில் நடத்தப்பட்டுவரும் ஆட்சிமுறை எவ்வளவு அவலட்சணமாக இருக்கிறது என்பது, தெளிவாகத் தெரியத்தான் செய்கிறது. தெரிந்து? தேசீயமல்லவா பேசுகிறார்கள்!! நாணயம் கூட இருக்கத்தேவையில்லை, 'தேசீயம்' இருந்துவிட்டால் போதும் என்று, வெளிப்படையாகப் பேசவில்லையே தவிர, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியின் சித்தாந்தமே, அதுவாகத்தான் இருக்கிறது.

தேசீயம் பேசி மக்களை மயக்க முடிகிறது, ஆகவே நாணயம் கூட இருக்கத் தேவை இல்லை என்று துணிந்து, போனால் வராது, பொழுது போனால் நில்லாது என்ற போக்கிலே தர்பார் நடத்தப்படுகிறது.

★

முகப்பில்...

"மித்திரன்"

உதவிய சித்திரம்!

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 25—9—55 [ஞாயிறு

# நினைவுச் சின்னம்

சிந்திரி
சித்தரஞ்சன்
தாமோதர் திட்டம்

என்று எத்தனை எத்தனையோ அமைப்புகளைத் துவக்கிவைத்துக் கொண்டிருக்கிறார் நேருபண்டிதர். பல புதிய நகர்களுக்கு அடிப்படைக் கல்நாட்டு விழாக்கள் நடத்துகிறார். நினைவுச் சின்னங்கள் பல திறந்துவைக்கிறார். இவை யாவும் காங்கிரசாட்சியின் மாண்பையும் நேருபண்டிதருடைய மதிப்பையும் காட்ட வல்லது என்கிறார்கள். இருக்கலாம். ஆனால் இதோ ஓர் நினைவுச் சின்னம், பாட்னா நகரிலே, பண்டிதரால் அல்ல, ஒரு பரிதாபத்துக்குரிய பாவையால் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. அந்த நினைவுச் சின்னம், நேரு ஆட்சியை உலகு அறியச்செய்யும் விதத்தது. பாருக்கெல்லாப ஆட்சிப் பண்பினை எடுத்துரைத்திடும் பண்டிதரின் ஆட்சி, எவ்வளவு மிருகத்தனமாக நடந்துகொள்கிறது என்பதை எடுத்துக்காட்டும் நினைவுச் சின்னம், இதனைக் காண்போர் சிந்திடும் கண்ணீர், இன்று கூர்வாளாகவில்லை. பண்டிதர் இதைக் காண நேரிட்டால், வெட்கித் தலைகுனியவேண்டித்தான் நேரிடும்.

படையிலே பிளவு உண்டாக்கி, பாசறையில் பேதமூட்டி, கோட்டைக் கதவின் காவலருக்குக் கைக்கூலி கொடுத்து, துரோகியாக்கிக் கொண்டு, வஞ்சகத்தால் வெற்றி கண்ட மன்னன், களத்திலே பிணமான மன்னனுடைய மகளைக் கடிமணம் புரிந்துகொள்ள இசையும் கதைபோல, திராவிடருக்குத் துரோகம் இழைத்துக் கொண்டே, வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தலைவர், இங்கு வரவேற்பு வைபவம் நடத்திக்கொள்ள வருகிறார்.

எல்லாம் வடநாட்டுக்கே. வளமெலாம் அங்கேயே. அங்கு வாழ்வு சிறக்கிறது, வறுமை குறைந்து வருகிறது! அணைத் திட்டங்கள் அங்கு மலைபோல! தொழிற்சாலைகள் எங்கு நோக்கினும்! பாலைவனம் சோலைவனமாகிறது! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதே கதிதான்!

இவையாவும் ஊரறிந்த உண்மை' நாடறியச் சொல்லியிருக்கிறோம்.

*கேட்டது-400 கிடைத்தது-200!*

சேலத்து இரும்பும், நெய்வேலி நிலக்கரியும் தூங்குகிறது, புத்தம் புதிய இரும்புத் தொழிற்சாலைகள் வடக்கே தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வளவு 'துரோகம்' திராவிடருக்கு இழைக்கப்பட்டிருக்கிறது— துரைமகன் போலப் பண்டிதர் பவனி வருகிறார், அவருக்குத் தூப தீப நைவேத்தியம் காட்டப்படுகிறது!

தொன்மையானது, மென்மை மிகுந்தது, இனிமையானது ஈடில்லாதது, இலக்கிய இலக்கணச் செறிவுள்ளது என்றெல்லாம் புகழப்படும் தமிழ் மொழியை அழித்தொழிக்கிறது ஆதிக்க மொழியாம், இந்தி. நமது இரயில்வே நிலையங்களில், அஞ்சல் அலுவல்களில், ஆதிக்க மொழியே காண்கிறோம்.

இந்த முறையில் நம்மை அவமானப்படுத்தும் ஆட்சியின் தலைவர் வருகிறார், அதனை விழாவாக்கி மகிழ்கிறார்கள்.

டாட்டாவின் நண்பர் வருகிறார்' தகரக் குவளையும் ஓட்டையாகிறதே என்ற அளவுக்குத் தரித்திரத்தில் தள்ளப்பட்டுள்ள திராவிட மக்கள், வரவேற்பு நடத்த வேண்டும் என்கிறார்கள், ஆளவந்தார்கள்.

பிர்லாவின் தோழர் வருகிறார் அவருக்கு விமரிசையான வரவேற்பு அளிக்க, உழைத்து உருக்குலையும் ஏழைகளின் படை திரட்டப்படுகிறது.

வேங்கை பாய்ந்து உடலைப் பிய்த்துவிட்ட நிலையில் குற்றுயிராகக் கிடக்கும் வீரன், கவனிப்பாரற்றுக் கிடக்கும்போது, வேங்கைக்கு, விருதுகள் அளித்து, அதன் கூர்மையான பற்களுக்குத் தங்க முலாம் பூசியும், கழுத்துக்கு வெள்ளிக் கண்டாமணி கட்டியும், காலுக்குக் கழல் பூட்டியும், வரவேற்பு அளிப்பார் உண்டா? கதையாகச் சொன்னால் கூடக் காரி உமிழ்வர்; இதோ கண் எதிரே நடக்கிறது, வறுமைக்கும் கொடுமைக்கும், துரோகத்துக்கும் ஆளாகி வதைக்கப்படும் தமிழ் மகன், இந்த நிலையை நாட்டிலே மூட்டிவிட்ட ஆட்சியின் தலைவராக உள்ள நேரு பண்டிதருக்குச் 'சோடசோபசாரம்' செய்ய அழைக்கப்படுகிறார்.

உணர்ந்த உண்மையை ஊராருக்குச் சொல்லவேண்டுமென்ற உள்ளத் தூய்மையுடன்,

வடநாட்டு ஆதிக்கத் தலைவர் வருகிறார்!

திராவிடத்தை அடிமைப்படுத்தும் தலைவர் வருகிறார்!

புதிய ஏகாதிபத்திய கர்த்தா வருகிறார்!

முதலாளிக்குப் பாதுகாப்பு அளிக்கும் முதல்வர் வருகிறார்!

டாட்டாவின் நண்பர் வருகிறார்; பிர்லாவின் பாதுகாவலர் வருகிறார்!

வரிப்பணத்தை வாரி இறைத்து விளம்பர வாணவேடிக்கை நடத்தும் ஆட்சியின் முதல்வர் வருகிறார்!

வடநாட்டை வாழவைத்து தென்னாட்டைத் தேயவைக்கும், துரோகத்தை முன்னின்று நடத்தும் முடிசூடா மன்னர் வருகிறார்!

தங்கம் விளையும் நாட்டிலே தரித்திரம் தலைவிரித்தாடும் நிலைக்குப் பொறுப்பாளராக உள்ளவர் வருகிறார்.

அடக்கு முறையை அவிழ்த்துவிட்டு எதிர்ப்புகளை அழித்தொழிக்கும் சர்வாதிகாரி வருகிறார்.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி, எவரையும் ஏவலராக வேண்டும் என்று கட்டளையிடும் ஆதிக்கத் தலைவர் வருகிறார்!

பீகார் மாகாணத்தில், பாட்னா நகரத்தில், பதினைந்து வயதுள்ள பாவை, "பாவிகளே, என் பதியைப் படுகொலை செய்துவிட்டீர்களே. ஆவி துடிக்கிறதே, அக்ரமக்காரர்களே, என் ஆருயிர் நாதனைக் கொன்று போட்டீர்களே, என் இன்பக் களஞ்சியத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட்டீர்களே,

அவர் ஒரு கல்லூரியிலும் நான் ஒரு கல்லூரியிலும் படித்துக் கொண்டிருக்கையில், கடிமணம் புரிந்துகொண்டோம், ஜோடிப் புறுவாகக் காதல் வானிலே வட்டமிட்டு விளையாடிக்கொண்டிருக்க வேண்டியிருக்க, காதகர்களே, கன்னெஞ்சக்காரரே, அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டீர்களே. குங்குமமிழந்தேன், மஞ்சள் அழிந்தது, மணாளனை, மாபாவிகளே, கொலைசெய்துவிட்டீர்களே. அவர் மான்சிங் அல்லவே, குற்றம் ஏதும் செய்யாத குணவான், கொள்கைக்காகப் போரிட்ட உத்தமன், உரிமைக் குரல் எழுப்பிய இலட்சியவாதி, அவர் என்னசெய்தார் உங்கட்குக் கேடு? கொலையா கொள்ளையா? தீயிட்டாரா, திராவகம் ஊற்றினாரா? தண்டவாளத்தைப் பெயர்த்தாரா, கஜானாவைத் தாக்கினாரா? குற்றம் ஏதும் செய்யாத, என் காதற் கணவனை அன்பு அஹிம்சை என்று பேசிடும் ஆட்சியாளர்களே, துப்பாக்கியால் சுட்டுக்கொன்றீர்களே. காதற்கனிமொழி பேசிக் களித்திருந்தோம், எதிர்கால வாழ்வுபற்றிய இன்பக் கனவுகள் எத்தனை எத்தனையோ கண்டு மகிழ்ந்திருந்தோம், மாலை மதியமும் மாசில் வீணையும், வீசும் தென்றலும் தரமுடியாத இன்பத்தை அவரைக் கண்டும் அவர் மொழி கேட்டும் பெற்றுவந்த என்னை, விதவையாக்கிவிட்டீர்களே தர்ம ராஜ்யம் நடாத்துவதாகக் கூறிக்கொள்கிறீர்கள், தயாபரர் என்று உங்களை ஏமாந்தோர் அழைத்திடக் கேட்கிறேன், தாலியை அறுத்துவிட்டீர்களே! மாதருக்கு எது ஜீவனோ, அதனை அழித்தீர்கள்! விளக்கை அணைத்துவிட்டீர்கள், விதவைக் கோலம் பெற்றேன்! விழியிலே வடியும் இரத்தம் வீண்போகுமா! என் உடலும் உள்ளமும் பதறப்பதற என் நாயகனை, நடு வீதியில் சுட்டுத் தள்ளிவிட்டீர்களே! நாசகாலரே! என் கண்ணீருக்கு என்ன பதிலளிக்கப் போகிறீர்கள்! ஊரெல்லாம் புகழ்கிறது, உலகமே கொண்டாடுகிறது என்று 'பிரதாபம்' பேசித்திரிகிறீர்கள், கொலை பாதகம் செய்கிறீர்கள், என் கொற்றவனைக் கொன்றீர்கள்! என் கணவன், வெடிகுண்டு வீசினானா, உம்மை வெட்ட வாள் தூக்கினானா? தன்னையொத்த மாணவர்கள் மீது, மமதை நிரம்பிய ஆட்சியினர், கொடுமைகளை ஏவியதை உரிமையின் அருமை அறிந்த காரணத்தால் கண்டித்தார், என் கண்ணாளர்! அவர் காட்டு மிருகமல்லவே, நாட்டின் மணிவிளக்கு! அவர் சட்டத்தை மீறினார் என்றால், தொட்டிழுத்துக் கொட்டடியில் அடைத்திருக்கலாம், வழக்குத் தொடுத்திருக்கலாம், சுட்டுத் தள்ளினீர்களே! தாலி அறுத்தீர்களே! தாலி இழந்தேனே!—" என்று சாந்திதேவி எனும் பெண்மணி, கூறிக் கதறிக்கொண்டிருக்கிறாள்.

கல்லூரியில் படிக்கும் சாந்தியை, கல்லூரி மாணவன் தீனநாத் எனும் இளைஞன், தன் காதலியாகக் கொண்டு கடிமணம் புரிந்துகொண்டான், அந்த இளம் தம்பதிகள், வாழ்க்கையில் என்னென்ன, இன்பம் காணவேண்டுமென்று எண்ணி எண்ணித் திட்டமிட்டனரோ, யார் அறிவர்! இளம் வயதினரான அவ்விருவரையும் கண்டு களித்த உற்றார் பெற்றோர், உள்ளம் என்ன நிலையை இப்போது பெற்றிருக்கிறதோ யாரே, கூறவல்லார்!

ஆகஸ்டு 12—13—நாட்களில் நடைபெற்ற மாணவர் கிளர்ச்சியின் போது, காங்கிரஸ் சர்க்கார், தடியடி போதாதென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து எட்டு பேர்களைச் சுட்டுத் தள்ளிற்று—இறந்துபட்டவர்களிலேஒருவன் தீனநாத்—சாந்திதேவியின் கணவன்!

சென்ற கிழமைதான், அந்தப் பரிதாபத்துக்குரிய பாவை, தன் கணவன் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தருகே பொதுமக்கள் அமைத்துள்ள நினைவுச் சின்னத்தைத் திறந்துவைத்து — பேசவில்லை—எப்படிப் பேசுவது—தேம்பித் தேம்பி அழுததாக 'தேசிய' ஏடுகளே செய்தி வெளியிட்டன!!

★

## பலே ஆசாமி!

"வக்கீலய்யா; ஜட்ஜிக்கு நாலு கூடை மாம்பழமும் மூன்று ஜதை சரிகைவேஷ்டி பார்சலும் அனுப்பியிருக்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கட்சிக்காரன் சொன்னான். மிரட்சி அடைந்தவக்கீல், "படுபாவி காரியத்தைக் கெடுத்து விட்டாயே! இலஞ்சம் கொடுக்க முயற்சித்தாய் என்று நினைத்து ஜட்ஜ் உனக்குப் பாதகமாக அல்லவா தீர்ப்பளிப்பார்" என்றார். கட்சிக்காரன், "எனக்குத் தெரியாதா வக்கீல் சார்! நான், பிரதிவாதியின் பெயரில்தானே அனுப்பினேன்" என்றான் கட்சிக்காரன்.

★

அடுத்த இதழில்

# எட்டு நாட்கள்

சி. என். ஏ.

தரும்

வரலாற்று ஓவியம்

பகுத்தறிவாளர் காவியம்

# கண்ணீரும் பன்னீரும்



தம்பி,

கோட்டைமீது, கொடி மரத்துக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு பேசப்போகிறார் நேரு பண்டிதர், சென்னையில்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மைதானத்திலே உள்ள மேடு பள்ளங்களைச் சமனாக்கி, பாதையைச் செப்பனிடுகிறார்கள், அங்கு பண்டிதர் பேசப்போகிறார்.

பண்டிதர் பவனிவர இருக்கிற 'ராஜபாட்டை'யைப் புதுப்பிக்கிறார்கள்—பல ஆயிரம் செலவு!

பண்டிதர் செல்ல இருக்கும் திருச்சி, குடந்தை, மாயவரம், காரைக்கால், புதுவை, வேலூர் போன்ற ஒவ்வோரிடத்திலும் இது போன்ற ஏற்பாடுகள், எழிலூட்ட, இன்பம் காட்ட எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோகில வாணி, குரலும் குழலும் இழைந்து, ஊனும் உயிரும் உருகத்தக்க வகையிலே இசை அளிக்க, என்னென்ன பாடல்களை அளிக்கலாம்,

"எனது உள்ளமே, நிறைந்த தின்ப வெள்ளமே!"

"கண்டதுண்டோ கண்ணன்போல்!"

"மாலைப் பொழுதினிலே..."

"அழைத்துவா, போடி!"

இப்படிப் பல உண்டே, எதைப் பாடுவது, இந்தியாவின் முடிசூடா மன்னன் அவையில் என்று எண்ணி எண்ணி, இராத்தூக்கமும் இழந்து, அந்நாளின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடும்.

அமைச்சர்கள் புதிய கதர்ச் சட்டைகள் தைத்துக் கொள்கிறார்களாம்!

போலீசும் பட்டாளமும், பவனி, பரணி, இரண்டுக்குமே தக்க ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்ளும் காரியத்திலே மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

காஞ்சிபுரத்தில் மட்டும் பண்டிதரின் பவனி பாங்கான முறையில் அமைய வேண்டும் என்பதற்காக ஏறத்தாழ முப்பதாயிரம் ரூபாய் செலவிடத் திட்டம் என்கிறார்கள்.

ஒரு தலைவரின்வருகைக்காகஇவ்வளவு ஆர்ப்பாட்டமா, இத்துணைப் பெருஞ் செலவா, இருண்ட தெருக்களும், நாற்றமடிக்கும் சேரிகளும் இருக்க, அவைகளைச் செப்பனிட்டு ஒளிதர முன்வராத ஆட்சியாளர்கள், பண்டிதரின் பவனிக்காக, பாதைகளைச் செப்பனிடுவதற்கும் எழிலளிப்பதற்கும் இவ்வளவு பெரும் செலவு செய்யத்தான் வேண்டுமா? இல்லாமையும், போதாமையும் நெளியும் நாட்டிலேயா, இப்படி! பாலின்றி அழும் பச்சிளங் குழந்தையைக் கதறக் கதறத் தொட்டிலில் கிடத்திவிட்டு, பன்னீரில் குளித்திடப், பளிங்காலான திருக்குளம் செல்லும் தாய், உண்டா!—என்றெல்லாம் கேட்டு பண்டிதருக்கு அளிக்கப்படும் ராஜோபசாரத்தின்பொருட்டுபெருந் தொகை செலவிடப்படுவதை நான் கண்டிக்கவில்லை! பண்டிதருக்கு வைபவம் நடத்தும் சாக்கிலாவது, இதுவரை ஏறெடுத்துப் பாராமலிருந்த பாதைகளைச் செப்பனிடவும், பாங்கு அளிக்கவும், முன் வந்தனரே, என்று மகிழவும் செய்கிறேன்.

'ஏன் இவ்வளவு செலவு?' என்று கேட்டால், தம்பி! காங்கிரஸ்காரர்கள் கடும் கோபம்காட்டி, இங்குள்ள பாதைகளைச் செப்பனிட்டோம், பண்டிதரின் பெட்டிக்கா பணம் போய்ச் சேருகிறது, நமது நகர்களின் சிருக்குத்தானே செலவிடப் படுகிறது, அறிவிலிகாள்! இதனையுமா அறிந்திர் இல்லை, என்ன மதியற்ற தன்மை! என்று கூறிக் கண்டிப்பர்.

வெள்ளைக்கார ஆட்சிக் காலத்தின்போது, கவர்னர், வைசிராய், ஆகியோர், இதுபோல 'விஜயம்' செய்வர், அப்போதெல்லாம், இது போலத்தான் பெரும் பணம் செலவிட்டு, பூசி மெழுகியும் புதுக்கோலம் காட்டியும், பாதைகள் அமைத்தும், பாங்கினைச் சமைத்தும் காட்டுவர், திருவிழாக்கோலம் எழும். அந்தச் சமயத்திலெல்லாம், கிளர்ச்சிக்காரர்களாக இருந்த காங்கிரஸ்காரர்கள்,

ஆடம்பரத்தைக் கண்டீரா?

அக்கிரமத்தைக் கேளீரோ?

கவர்னர் வருகிறான் பணம் பாழாகிறது!

பரங்கி வருகிறான், பாதையைச் செப்பனிடுகிறார்கள்.

ஒரு தனி மனிதன் விஜயத்துக்குப் பணம் தண்ணீர் பட்டபாடாகிறது, தர்மமா! கேட்பார் இல்லையா?

நம்மைப் போன்ற மனிதன், தேவனல்ல! அவன் வருகிறான் என்றதும், ஏன் இந்தப் பரபரப்பு, எதற்காகப் படாடோபம்!

பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடும் நாட்டிலே, பவனியாம், பவனி! வெட்கமில்லையா! வேதனையாயில்லையா! விசேஷ ரயிலாம்! பிரத்யேகப் பாதையாம்! அலங்கார மேடையாம்! போலீஸ் அணிவகுப்பாம்! எவ்வளவு ஆடம்பரம் பார்த்தீர்களா! ஏழையின் பணம் பாழாகும் விதத்தைக் கண்டீர்களா!

ஏழை எளியவர் கொட்டுவது கண்ணீர், ஏய்த்துப் பிழைப்பவன், குளித்திடப் பன்

னீர்! ஏனென்று கேட்டிட வீரர் இல்லையா, விவேகி இல்லையா, தீரர் இல்லையா, ஆண்மகன் இல்லையா? என்றெல்லாம் சிலர் முழக்கமிட்டனர், முணுமுணுத்தனர் பலர், பத்திபத்தியாக எழுதித் தள்ளினர் சிலர், பாமர மக்கள் பதைத்தனர், பதறினர், பணம் பாழாகிறது! பணம் பாழாகிறது!! என்று கொதித்தெழுந்து கூறினர்.

கவர்னர், வைசிராய் ஆகியோரின் 'விஜய'த்தைச் சாக்காகக் கொண்டு, நமது நகரங்களைத்தானே அழகுபடுத்துகிறார்கள், நமது பாதைகளைத்தானே செப்பனிடுகிறார்கள், இது நமக்கு மறைமுகமாகக் கிடைக்கும் நன்மைதானே, என்று அப்போது வாதாட, தேசிய வாதிகளின் மனம் இடம் தரவில்லை!

**இப்போது நேரு பண்டிதரின் பவனி, நித்திய நிகழ்ச்சியாக இருக்கிறது.**

**பிரத்யேக விமானம்! ஸ்பெஷல் இரயில்! ஸ்பெஷல் கார்!**

**மக்களைக் காணமட்டுமல்ல, மலை உச்சி ஏறி மகிழ, மலர்த் தோட்டம் கண்டு இன்புற, அலங்காரப் படகு மூலம் ஆறுகளை கடந்து ஆனந்தம் கொள்ள, கிராமிய நடனம் கண்டு களிப்படைய, குகைச் சித்திரங்களைக் கண்டு வியந்திட, கோயிற் சிற்பங்களைக் கண்டு ஆச்சரியப்பட, கொலு மண்டபங்களைக் காண, கோட்டைகளின் மீதேறிக் காட்சிதர, கோலாகல வரவேற்பு வைபவங்களில் கலந்துகொள்ள—**இன்னோரன்னவற்றுக்கெல்லாம், நேரு பண்டிதருக்கு நேரம் கிடைக்கிறது; இவர் இத்தகைய காட்சிகளைக் கண்டு களித்திடும் ஏற்பாடுகளைச் செவ்வனே செய்துதர ஏற்படும் செலவு பெரும் பாரமாகிறது—எனினும் ஏற்றுக்கு இந்த ஆடம்பர ஆரவாரம், பயனற்ற படாடோபம், பாமரரை வஞ்சிக்கும் பகட்டு, பணம் பாழாகும் விழாக்கள், என்று எண்ண மறுக்கிறார்கள், துணிந்து எவரேனும் கேட்டாலோ, ஏடா! மூடா! என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்? எங்கள் நேருவுக்கு இதுவும் செய்வோம், இதற்கு மேலும் செய்வோம்! என்று கூறி மிரட்டுகிறார்கள்.

நேருவுக்காக நடத்தப்படும் பவனிகள், வைபவங்கள், வரவேற்புகள் கொண்டாட்டங்கள், கோலாகலங்கள் போன்றவைகள், வெள்ளைக்காரன் காலம்தொட்டு இருந்து வருகிற, ஏகாதிபத்திய முறையாகும்! அன்று ஏகாதிபத்திய முறையினைக் கண்டித்தவர்கள், இன்று அதே முறையைக் கையாண்டு, களிப்பும் பெருமையும் அடைகிறார்கள். அன்றும் இன்றும், ஏழை கண்ணீர் வடித்த வண்ணமே இருக்கிறான்!

தம்பி, ஒரு கதை உண்டு. பரம ஏழையாக இருந்த ஒருவன், தேவாலயத்தின் அருகே பாதையில் நடந்து, பிச்சை எடுத்துக் கொண்டிருந்தானாம்! கந்தல் ஆடை, கையில் திருஓடு, கண்ணில் காமாலை, கைகால்களில் புண்—இந்தக் கோலத்தில். ஆண்டவனின் அடிபணிந்து அர்ச்சித்து அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அருளைப் பெறுவதற்காகப் பிரபுக்கள் பட்டுடை அணிந்து, பளபளக்கும் அணிபணி பூண்டு, பொன்னவிர் மேனியரோடு வண்டி வாகனங்களில் செல்வர்; இதைக் கண்ட பிச்சைக்காரன், மனம் நொந்து "ஆண்டவனே! ஏதோ என்னை இல்லாதவனாகவும், இவர்களைச் சீமான்களாகவும் படைத்துவிட்டாய், அதுவே அக்ரமம், அது போதாதென்று, இருவருக்கும் பொதுவாக ஒரு பாதையையும் அமைத்திருக்கிறாயே, ஏழைகள் செல்வதற்கு ஒரு பாதை, சீமான்கள் பவனிக்காக மற்றோர் பாதையாவது அமைத்திருக்கக் கூடாதா, என் கண்ணிலே, இந்தப் பளபளப்பும் மினுமினுப்பும், தகத்தகாயமும் தெரியாமல் இருந்தாலாவது, வேதனை குறையுமே!" என்று சொல்லிக்கொண்டானாம்.

எப்படியோ, அவன் ஒரு பெரும் சீமானாகிவிட்டான்—பட்டுடை! பரிமளகந்தம்! பல்லக்கு! பாவையர்! எல்லாம் கிடைத்துவிட்ட நிலை! பல்லக்கில் செல்கிறான், பரம ஏழையாக இருந்தவன், 'பரம்பொருளின்' அருள்பெற! பாதையிலே, பஞ்சை பராரி, ஏழை, நடைப்பிணம், கண்டான்! கண்களை இறுக மூடிக்கொண்டு, கலக்கத்துடன், "கடவுளே! இதென்ன கொடுமை! ஏன் இப்படிப்பட்ட 'கோரமான' காட்சி என் கண்ணில் படும்படி செய்கிறாய்! நான் என்ன குற்றம் இழைத்தேன்! இறைவா! இந்த ஜென்மங்கள் எமது கண்களிலே தெரிந்து இதயத்தைத் தாக்காதிருக்கும் வண்ணம், இதுகளுக்கென்று ஒரு தனிப் பாதையும், உன் அருளைப்பெற்ற எமக்கென்று ஒரு தனிப்பாதையும், அமைத்துத் தரக் கூடாதா!" என்று இறைஞ்சினானாம்.

பஞ்சை பிரபுவானதும், பஞ்சைகளைப் பார்ப்பதும் வேதனை என்று எண்ணுகிறான்—அதற்காக ஆண்டவனிடம் கோபித்துக் கொள்கிறான்!

பஞ்சை பிரபுவானதும் அவன் மனதிலே எத்தகைய நஞ்சு நெளிகிறது பார், தம்பி!

காங்கிரஸ்காரர்கள், தேசியத் திருக்கோயிலிலே பூஜை நடாத்திய காலம் தீர்ந்துவிட்டது; இப்போது அவர்கள் பவனி வரும் பிரபுக்களாகிவிட்டனர் — நெஞ்சமெலாம் நஞ்சாகிவிட்டது—என் செய்வது!

வஞ்சியர் பாடி ஆடி மகிழ்வூட்ட, சீமான்கள் பூச்சக்கரக் குடை பிடிக்க, ஆளவந்தார்கள் சாமரம் வீச, வைபவங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன! உற்சவம் நடத்துகிறார்கள், உபதேசம் கிடைக்கிறது!! ஊர் மக்களின் வறுமையும் வேதனையும், எப்போதும் போலத்தான் இருந்து வருகிறது!!

தஞ்சை திருச்சி மாவட்டங்களிலே, தம்பி, பெரும் புயலடித்து படுநாசம் விளைந்ததே, நினைவிலிருக்கிறதா? நெற் களஞ்சியம், பொய்யாத பொன்னியால் பாலூட்டப்பட்டு வளரும் தஞ்சை. அங்கு ஊரெலாம் வெள்ளக்காடாகி, பெரு மரங்கள் சாய்ந்து, பேய்க்காற்றால் ஏழைகள் இருப்பிடங்களெல்லாம், பிய்த்தெறியப்பட்டு, பெருஞ்சேதம் விளைந்த சமயம். அந்த நேரத்தில், பண்டிதர் வந்தார்! வாரீர் தலைவரே! எமக்கு வந்துற்ற அவதியைக் காணீர் பண்டிதரே! பூந்தோட்டம் அழிந்து கிடக்கும் கொடுமையைக் காணீர்! பொன்னியின் செல்வர்கள் புலம்பிக் கிடக்கும் கோரத்தைப் பாரீர்! கண்ணீர் துடைத்திடுவீர்! கஷ்டத்தைப் போக்கிடுவீர்! காவலரே! வாரீர், வாரீர்! வேதனை குறையும், நம்பிக்கை மலரும். ஒரு நல்ல வார்த்தை, சிறிதளவு ஆறுதல் மொழி கூறவாரீர்! புயலே! கடலே! பேய்க்காற்றே! பெருவெள்ளமே! எம்மை அழித்திடக் கிளம்பினீர்! அழிவையும் ஏவினீர்! எனினும், அஞ்சற்க! அஞ்சற்க! உமக்கு வந்துற்ற இன்னலைத் துடைத்திடுவேன்! இடுக்

கண் வருங்கால் நகுக! அழிவை ஒழித்திடுவேன், அல்லலைத் துடைத்திடுவேன்! என்று எமக்கு ஆறுதலளித்திட எமது அருமைத் தலைவர், நேரு பண்டிதர் வருகிறார், என்று கூறி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நம்பிக்கை பெறுவோம்! வருக பண்டிதரே! வருக! எம்மை வாழ்விக்கவந்த பெம்மானே வருக, ஈடில்லாத் தலைவரே! இணையில்லா வீரரே! வருக! வருக! என்று அழைத்தனர்.

நேருபண்டிதர் வந்தார்—தென்னகத்துக்கு!

தஞ்சை தலைவிரிகோலமாகக் கிடக்கிறது. பண்டிதரோ நேரே, சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடும் கவர்ச்சியூட்டும் கேரளம் சென்றார், குன்றின்மீதேறி, பளிங்கு மாளிகையில், அமர்ந்து, அங்குள்ள அடவியில், கரியும் கரியும் களியாட்டம் நடாத்திடும் காட்சியை, வேங்கை சீறி வேழத்தைத் தாக்குவதை, புலிக்கு அஞ்சிப் புள்ளிமான்கள் சிட்டாகிப் பறப்பதை, காட்டெருமைக் கூட்டம் பெருமரங்களைச் சாய்ப்பதை, வர்ண ஜாலமிக்க விந்தைப் பறவைகள் விதவிதமான ஒலி கிளப்பி மகிழ்வதை, இந்த "ஆரண்ய" அழகினைக் கண்டு அகமகிழ்ந்திருந்தார்! திருவிதாங்கூர் மன்னரின் பிரத்யேக விருந்தினர்!

கேரளநாடு! மன்னரின் விருந்தினர்! குன்றின்மீது மாளிகை!! இன்பத்தேன் பாயாதிருக்குமோ!! இதைக் காண வந்த நேருவை, ஐயோ! அப்பா! அம்மா! ஐயகோ! என்று தஞ்சை அழைத்தால், வருவாரா? வரவில்லை! புயல் தஞ்சைப் பூங்காவை அழித்தபோது ஏற்பட்ட வேதனையை விட அதிகமாகத்தான் வேதனை, நேருபண்டிதர் அந்தச் சமயத்தில் 'ஆரண்ய ரசம்' பருகிய சேதி கேட்டவர்களுக்கு! வெள்ளைக்காரன், இதுபோலச் செய்யத் துணியவில்லை, செய்திருந்தால், ஆயிரம் ஆயிரம் மேடைகள் அதிர்ந்துவிடும்! நேரு செய்தார்—ரோமாபுரி தீப்பிடித்து எரியும்போது நீரோ மன்னன் யாழ் வாசித்து மகிழ்ந்தான் என்பார்களே, அதுபோல!

அண்ணனுக்கு நானென்ன மட்டமா! என்று கேட்பதுபோல, விஜயலட்சுமி அம்மையாரும், அவர் குடும்ப அலங்காரவதிகளுடன், சீர்கெட்டுப்பேர்கெட்டு, ஊர்விட்டு ஊர் ஓடி சிரமப்பட்டுச் சிதையும் தமிழர்களை, பிடரியில் கால்வைத்து உதைத்துத்தள்ளிடும் போக்கில், கொத்தலாவல சர்க்கார் நடந்துகொண்ட நேரமாகப்பார்த்து, விருந்து வைபவத்தில் கொண்டாட்டமாகக் கலந்துகொண்டார்; குமரிகளோ, கடையும் இடையும். நடையும் உடையும், மேனாட்டு மங்கையரை வெட்கிடச் செய்கிறது பார் என்று கூறுவதுபோல, கோலம் காட்டி, ஆங்கில முறை நடனமாடி, அகமகிழ்ந்தனர்!!

வெளிப்படையாக, வெட்கமின்றி யார் கேட்கமுடியும் என்ற துணிவுடன் தான், வடநாட்டு வன்கணர்கள், 'தர்பார், நடத்துகிறார்கள்! வாயடைத்தும், கைகட்டியும் நிற்பது தான், தேசியம் என்று கருதப்படுகிறது—ஆகுமா இத்தகைய அக்ரமம் என்று கேட்கத் துணிபவரையோ, தங்கள் கோபப்பார்வையாலேயே சுட்டுச்சாம்பலாக்கி விடலாம் என்று எண்ணுகிறார்கள் காங்கிரஸ் காரர்கள்!

கோட்டைமீது ஏறி, கவர்னரும் முதல் மந்திரியும் புடைசூழ அமர்ந்து, நேரு பண்டிதர் பேசப் போகிறார்.

என்ன பேசுவார்? பஞ்சசீலம் பாரதத்தின் புகழ் பாரெலாம் பரவிடும் பெருமை, உழைப்பின் மேன்மை, கோவாக்கொடுமை, கொரியாவில் நமது கடமை, ஆப்பிரிக்க சர்க்காரின் மடமை, ரஷிய உபசாரத்தின் இனிமை, இவை பற்றி எல்லாம் பேசப் போகிறார்! ஏழ்மை, அறியாமை, மார்க்கத் துறையிலே உள்ள மடமை, திராவிடத்துக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமை இவைபற்றிப் பேசிட முன்வாரார்—இவை பற்றிப் பேசுவோர்மீது சினம் கொட்டத் தவறமாட்டார்!

சிறுபிள்ளைத்தனம்

பைத்யக்காரர்கள்

அர்த்தமற்ற ஆபாசம்

என்றெல்லாம் ஏசுவார்! எதிர்ப்புகளை அழித்தொழிப்போம் என்று எக்காளமிடுவார்!

பண்டிதரைக் காணச்செல்லும் பெருங்கூட்டமும், அவருக்குப் பாரிலே கிடைத்திடும் புகழ் மாலை, அவருக்காகப் பிறநாட்டார் நடத்திய விருந்துகள் வைபவங்கள், அறுபதைத் தாண்டியவர் இருபது வயது வாலிபர் என உற்சாகமாகத் காணப்படும் காட்சி, அவருடைய மேனியிலே தெரியும் மினுமினுப்பு, கண்களிலே உள்ள குறுகுறுப்பு, ஆகியவை பற்றிப் பேசி மகிழ்வர்—அவரிடம்தான் இந்திய பூபாகம் எட்டு ஆண்டுகளாக ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. எனவே மக்களின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் பொறுப்பாளர் அவரே, அங்கிலையில் உள்ளவர், இவ்வளவு கவர்ச்சி பெற்றவராக இருந்தும், மக்களைச் சொக்கிடச் செய்யவும் பிற அரசுகளின் நேசத்தைப் பெறவுமான திறமை இருந்தும், அவருக்கு எதிர்ப்பு என்பது உருவான முறையில் எங்கும் இல்லாதிருக்கும் நிலையில், நாட்டிலுக்கு எந்த அளவுக்கு வாழ்வளித்திருக்கிறார்—வறுமையை ஓட்டிட, வாட்டத்தைப் போக்கிட, அறியாமையை அகற்றிட, இல்லாமையை ஒழித்திட என்னென்ன காரியங்களில் ஈடுபட்டார், என்ன சாதித்துள்ளார், என்பது பற்றி, எண்ணிடப் போவதில்லை — காட்சியில் சொக்கி நிற்பர்! மறுக்க முடியாத

---

## வாழ்த்துகிறோம்

நடிகத்தோழர் சி.எஸ். மகாலிங்கம்—காமாட்சி வாழ்க்கை ஒப்பந்தம் கும்பகோணத்தைச் சார்ந்த கோவிந்தபுரத்தில் 14-9-55 அன்று அண்ணுதுரை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. குடந்தைத்தோழர் கே.கே. நீலமேகம், காஞ்சி சி. வி.ராசகோபால், நடிகமணி டி.வி. நாராயணசாமி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராசேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு ஏராளமானபரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் தந்திகளும் வந்தன. மாலையில் சீர்காழி கோவிந்தராசன் அவர்களின் இன்னிசை நடைபெற்றது. புதுமணத் தம்பதி வாழ்த்துகிறோம்.

* * *

பெண்ணாடம் புதுமைப்பிரசுர உரிமையாளர் தோழர் வீ.ராமசாமி—அலமேலு திருமணவிழா 12-9-55 அன்று பெண்ணாடத்தில், சிறப்பாக நடைபெற்றது. அகில இந்திய வானொலியைச் சேர்ந்த எழுத்தாளர் தோழர் 'சுகி, தலைமையில் எழுத்தாளத் தோழர்களான 'அகிலன்', 'எல்லார்வி', 'மகி', ரங்கராஜன், பூவை ஆறுமுகம், ஆகியோரும் தோழர்கள் விருத்தாசலம் முனுசாமி, தில்லை. வில்லாளன், இராம. அரங்கண்ணல் முதலியோரும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். சீர்திருத்தத்தம்பதிகளுக்கு நமதுவாழ்த்துக்கள்.

உண்மை ஒன்று இருந்திடக் காண்கிறோம் — காந்தியாருக்குப் பிறகு, பாமர மக்கள், நேரு பண்டிதரிடம் தான், அளவற்ற பாசம் கொண்டுள்ளனர். இந்த அளவுக்கு, பாமரரின் பாசத்தைப் பெற்றுள்ள தலைவர்கள், இன்று இங்கும் சரி, வெளிநாடுகளிலேயும் சரி, அதிகம் பேர் கிடையாது! நேரு பண்டிதரைக் காணும்போது, உவகை கொண்டு நமது மக்கள் முகமலர்ச்சியுடன் அவரை வரவேற்கத் திரண்டிடுவதுபோல, ஈடனுக்கோ, ஐசனவருக்கோ, அவர்தம் நாட்டிலே உண்டா என்பதுகூடச் சந்தேகம்தான். திறந்த காரில் நின்ற வண்ணம் தெருவின் இரு மருங்கிலும் ஆர்வத்துடன் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் முதியவரும் சிறாரும் அணிவகுத்து நிற்கும் காட்சியைக் கண்டு புன்னகை காட்டியும் பூச்செண்டு வீசியும், நேரு பவனி வருவதுபோல ஈடனும் பிறரும் பவனி வருதில்லை. அந்த நாடுகளிலெல்லாம் மக்கள், உற்சவம் கொண்டாடும் கட்டத்தைக் கடந்து விட்டனர்; இங்கு உற்சவம் விமரிசையாக நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. பல திருவிழாக்களிலே; நேரு பவனியும் ஒன்றாகக் கருதப்பட்டு, விழாக் காட்சிகளிலே கவர்ச்சி கண்டு, அதோ பார் பொய்க்கால் குதிரை, இதோ பூத நடனம், அதோ கொம்பு ஊதுகிறார்கள், இங்கே பார் கோணங்கிக் கூத்து, என்று சுட்டிக் காட்டி, சிரித்து மகிழ்வதுபோல, அதோ பார் நேரு சிரிக்கிறார், ஆமாம், ஆமாம், எதையோ உற்றுப் பார்க்கிறார், மாலையை வீசுகிறார் பார், மாதர் பக்கமாக, மகள் இந்திரா நேருவின் முகம் மலர்கிறது பார், அதோ அந்த மோடாரில் கேவல் சிங், இது கிளப்வாலா, அந்த ப்யூக்கில் இருப்பவர்தான் காமராஜர், என்று காட்சிகளைக் காட்டிக் காட்டிப் பேசி மகிழ்கிறார்கள். இவ்வளவு நேசத்தையும் பாசத்தையும், உற்சாகத்தையும் உற்சவத்தையும் பெறுகிற நேரு பண்டிதரால், இதோ வறுமையை ஒழிக்கும் திட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வழி, புதிய தொழிற்சாலைகள், வாழ்வுக்கு புதிய வசதிகள், தருகிறேன் மகிழ்ச்சி பெறுவீர்!.......என்னிடம் இத்துணை அன்புகொண்ட நண்பர்களே! நம்பிக்கை வைத்திருக்கும் நல்லவர்களே! உங்கள் நல்வாழ்வுக்காக நான் சாதித்துள்ள காரியங்களின் பட்டியலைக் கூறுகிறேன் கேண்மின் என்று எடுத்துக் கூறுகிறாரா, கூற முடிகிறதா, கூறும் வழி இருக்கிறதா, என்றால், இல்லை, இல்லை, அதுதான் இல்லை, அன்பு சொரிகிறார்கள் மக்கள். அகமகிழ்கிறார் நேரு, பிறகு அகில உலகச் செய்திகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துக் கூறிவிட்டு, ஆகவே 'ஜெய் இந்து' என்று முழக்கமிடச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்—திருவிழாக் கோலம் கலைகிறது, தெருக்களில் எப்போதும்போல திகைத்தவன், தத்தளிப்பவன், வாழ்க்கைக்கு வழிதேடி அலைபவன், வறுமையால் வாட்டப்படுபவன், மாடென உழைத்திடும் மனித உருவங்கள், வாலிபத்தை வயோதிகமாக்கிக்கொண்ட வறுமையாளர்கள், பிணிகொண்டோர் பிச்சைக்காரர் ஆகியோர் ஊர்ந்து சென்ற வண்ணம் உள்ளனர், கண்ணீர் வற்றிவிடவில்லை, கை பிசைந்து கொள்வது நின்று போவதில்லை. கண்டோம் களித்தோம் நேரு பண்டிதரை, நமக்குற்ற இன்னல் ஒழிந்திடக் கண்டோம், இன்பம் பெருகிடக் கண்டோம், இதனை நமக்கு அளித்திட்ட ஏந்தலைப் போற்றுதும், அவர் ஆட்சியின் மாட்சியைப் போற்றுதும், என்று கூறிட மக்களால் முடியவில்லை!

பாமரரின் நிலை இது எனின், இந்தியப் பேரரசு எந்தமுறையில் நடத்தப்பட்டு வருகிறது, எவ்விதமான எதேச்சாதிகாரம் கொழுந்துவிட்டு எரிந்து ஜனநாயக மலரினைக் கருக்கி விடுகிறது, எத்தகைய அடக்கு முறைகள் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது, அதன் விளைவாக விடுதலை வேட்கையும் உரிமை ஆர்வமும் கொண்டவர்கள் எவ்வளவு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், திட்டப்படும் திட்டங்களிலே உள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவோரும், அவை நிறைவேற்றப் படுவதிலே ஏற்படும் ஒழுங்கினங்களைச் சுட்டிக்காட்டுவோரும் எவ்விதம் அலட்சியப் படுத்தப் படுகிறார்கள், ஆட்சி முறையின் காரணமாக ஏழை மேலும் ஏழை ஆக்கப்படுகிறான், இலட்சாதிகாரி கோடீஸ்வரனாகிறானே, முறையா, என்று கேட்போர் மீது கண்டனம் எப்படி வீசப்படுகிறது என்பனவற்றை அறிந்துகொள்ளும் அளவுக்கு அரசியல் அறிவு படைத்தவர்களோ, நேருவின் பவனியிலே உள்ள கவர்ச்சிக்கும் நாட்டு மக்களுடைய வாழ்வின் முன்னேற்றத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுள்ளனர், எனினும் அந்தப் பெருங்கூட்டம், விழாக்கோலம், கவர்ச்சி ஆகியவைகளைக் கண்டதும் திகைப்புற்று, இவ்வளவு மகத்தான செல்வாக்குப் பெற்றிருக்கும் பெருந் தலைவரை, மக்களை மயக்கும் சக்தியை இந்த அளவுக்குப் பெற்றுள்ள நேரு பண்டிதரை, அண்டிப் பிழைத்தால்தான் வாழ்வு, எதிர்த்தாலோ, மூலையில் தள்ளப்பட்டு விடுவோம் என்று அஞ்சி, அவர்களும் கோலாகலத்திலே கலந்துகொள்வதே சாலச் சிறந்தது என்று எண்ணிவிடுகிறார்கள்! காங்கிரஸ்காரர்களோ, பெருமழை பெய்து, தெருவெல்லாம் தண்ணீர் ஆறென ஓடும்போது, பாதையிலே இருந்த ஆபாசங்கள் அடித்துக்கொண்டு போகப்பட்டு, தெரு துப்புரவாவது போல, நேருவின் பவனியால் ஏற்படும் உற்சாக வெள்ளம், காங்கிரசாட்சியினால் ஏற்பட்டுள்ள அல்லலை அவதியை, அதிருப்தியை அவலட்சணத்தை, எதிர்ப்பை எரிச்சலை, ஒரே அடியாகத் தள்ளிக்கொண்டு போய்விடும், எங்கும் காங்கிரஸ் கட்சியின் மதிப்பும் செல்வாக்கும் ஓங்கித்தழைத்திடும், மாற்றார் உற்றாராவர் உற்றார் உவகையால் துள்ளிக் குதிப்பர், ஊராளும் முறையினால் ஏற்பட்ட உற்பாதங்களையும் மறந்து மக்கள் காங்கிரசுக்கு ஆதரவு தருவர், அன்பினைச் சொரிவர் என்று எண்ணிக்கொள்கிறார்கள்.

இவர்களின் அச்சத்துக்குக் காரணம், நேருபண்டிதரால் பாமரரைப்

## டில்லியில்

அக்னிபோஜ்:- பி. சி. ஜியை ஆதரிக்கும் படி, டாக்டர்கள் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள், என்று ராஜாஜி சொன்னாரே, அது உண்மையா?

அமிர்தகௌர்:- ராஜாஜி சொன்னது உண்மையல்ல.

சூரியநாராயணா:- ராஜகோபாலாச்சாரியார் இப்படிப்பட்ட தப்புப் பிரசாரத்தில் ஈடுபடுகிறாரே அதற்காக அவர் மீது சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

அமைச்சர் மௌனமானார்!

பெருமளவுக்குத் திரட்ட முடிவதால் அவருடைய செல்வாக்கை எதிர்த்தால், மக்கள் தம்பால் கசப்படைவர் என்பதுதான். இன்றைய நிலையைத்தான் இவர்கள் எண்ணிப்பார்க்கிறார்களே தவிர, உண்மையை எல்லாமக்களும் உணர்ந்து நாம் வஞ்சிக்கப்பட்டோம் இம்சிக்பட்டோம், ஏமாற்றப்பட்டோம் என்பதை அறிந்து கொதித்தெழப் போகும் ஓர் நாள் வந்தேதீரும் என்பதையும், அந்நாளில், எமக்குக் கொடுமைகளும் துரோகமும் இழைக்கப் பட்டபோது, அந்த நேருவுக்குப் பராக்குப்பாடிக்கொண்டும், பல்லக்குச் சுமந்துகொண்டும் இருந்தவர்தானே நீர்! எம்மை இம்சித்தபோது அவரிடம் இளித்துக் கிடந்தவரல்லவா நீர்! எமக்குத் துரோகம் இழைக்கப்பட்டபோது அவர்முன் துதிபாடி நின்றீரல்லவா! விளக்கமறியாதாருக்கு விளக்கவேண்டும் என்ற பொறுப்பை மறந்து, கும்பலில் கூடிக் குலவினால், நமக்கும் சுவைத்திடச் சில கிடைக்கும் என்றுதானே அவர்பின்னோடு சுற்றித் திரிந்தீர் என்று கேட்கப் போகிறார்கள் என்பதை மறந்தேவிடுகிறார்கள். அதனால்தான், அறிந்ததைக் கூறவும் அச்சப்பட்டுக்கொண்டு 'அடைப்பம்' தாங்கி, அதிலேயே ஆனந்தம் தேடிக்கொள்கிறார்கள். இழைக்கப்படும் கொடுமையை எதிர்த்திடத் துணிவும், மக்களிடம் எடுத்துக் கூறிடும் நெஞ்சு உரமும் கொண்டவர்களின் அளவு குறைவுதான், தம்பி, ஆனால் அவர்கள் தமது கடமையைக் கலக்கமின்றிச் செய்து கொண்டு வருகிறார்கள். அரசியலில் புதுப் புதுக் காற்றாடிச் சண்டைகளைக் கிளப்பிக் கொண்டு இருப்பதில்லை, நிழலை உருவமெனக் கூறிப் போராட்டம் நடத்துவதில்லை, பிரச்சினை ஏதற்கும் பரிகாரம் தேடும் முழு உரிமை எமக்கே, பிறருக்கு இதிலே பின்னோடி வரத்தான் சலுகை அளிக்கப்படும் என்று பேசிடுவதில்லை, தொடர்ந்து, திராவிடருக்கு இழைக்கப்படும் கொடுமையை, துரோகத்தை, மக்களிடம் எடுத்துக் கூறி, அவர்களின் மனமயக்கத்தைப் போக்கிய வண்ணம் உள்ளனர். தம்பி! அந்த அரும்பணியாற்றிடும் அஞ்சா நெஞ்சினர் கொண்ட கழகத்தில்தான், நானும் நீயும் இருக்கிறோம். அன்பன்,

**அண்ணாத்துரை.**

# வரவேற்பு

கழகம்:- என்ன, தேசீயம்! பிரமாதமான வரவேற்பாமே, சபாநாயகராக இருந்து சகலகட்சிகளுடைய பாராட்டுதலையும் பெற்ற சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கு; டில்லியில்.

தேசீயம்:- டில்லியிலா? வரவேற்பா? பேப்பரில் வந்ததா? நான் பார்க்கத் தவறிவிட்டேனே...

கழகம்:- சிவசண்முகனாருக்கு மட்டுமல்ல தேசீயம்! நம்ம முதலமைச்சர் காமராஜருக்கும் வரவேற்பு!

தேசீயம்:- எங்கே? டில்லியிலா! பலே! பலே!

கழகம்:- முதலமைச்சருக்கு மட்டுமல்ல, முடிச்சு அமைச்சருக்கும்...!

தேசீயம்:- ஏம்பா. கழகம்! ஆரம்பிச்சுவிட்டயே உன் குறும்புத்தனத்தை, அதென்னப்பா, முடிச்சு அமைச்சர்...

கழகம்:- நம்ம சுப்பிரமணியனார்......... முடிச்சு—பணமுடிச்சு அய்யா—நிதி அமைச்சர்.

தேசீயம்:- அதைச் சொல்றயா! அவருக்கும் டில்லியில் வரவேற்பா?

கழகம்:. ஆமாம், சென்ற கிழமையும் அதற்கு முந்திய கிழமையும் இவர்களுக்கு மகத்தான வரவேற்பு.

தேசீயம்:- இனி உங்களோட வாய் அடைத்துப்போகும், இல்லையா? நம்ம பக்கத்துக்காரர்களுக்கு வடநாட்டிலே மதிப்பு கிடையாது—வரவேற்புக் கிடையாது — உபசாரம் கிடைக்கிறதில்லை, அப்படி இப்படின்னு பெசிண்டு கிடப்பேள்—இனி வாயைத் திறக்க முடியாது. டில்லியிலேயே நம்ம தலைவாளுக்கு வரவேற்புன்னு, நீரே சொல்றீர்......

கழகம்:- ஆமாம்! உமக்குப் பூரிப்பும் பெருமையும் பொங்கி வருகிறது ...இல்லையா!

தேசீயம்:- இருக்காதோ! நிஜமாச் சொல்றேன்—வடநாட்டிலே நம்ம தலைவாளுக்கு மதிப்புத் தருவதில்லை, வரவேற்புக் கிடையாதுன்னு நீ சொல்கிறபோது எனக்கு கொஞ்சம், கோபம், துக்கம், குடையும். இந்தக் கழகத்தான்கள் சொல்றபடிதானே, வடக்கத்தியா நம்ம தலைவாளுக்கு மதிப்புத் தராமலிருக்கான்னு கோபம்தான்...

கழகம்:- இப்ப, மனம் குளிர்ந்திருக்கும்.

தேசீயம்:- ஆமாம்......சந்தேகமென்ன பரம சந்தோஷமா இருக்கு, நீ சொல்ற சேதிகேட்டு.

கழகம்:- முழு சேதி சொல்லலியே, தேசீயம்! பாதிதான் சொன்னேன்...

தேசீயம்:. என்னப்பா, கரடிகிளப்பறே? வரவேற்பு ஏற்பாடாகி ரத்து ஆகிவிட்டதோ?

கழகம்:- இல்லை, இல்லை, வரவேற்பு நடந்தது, ஆனா, வரவேற்பு ஏற்பாடு செய்து நடத்தினவா' யார் தெரியுமோ?

தேசீயம்:- யார்...?

கழகம்:- வடக்கத்திக்காரர் அல்ல! இங்கே இருந்து அங்கே போயிருக்காளே, தமிழர்கள், அவர்கள் நடத்தினா......

தேசீயம்:- அப்படியா......!

கழகம்:- நடேசன் எம்.பி. தெரியுமா எலக்ட்ரிக்கம்பெனி! அவர் ஒரு விருந்து வரவேற்பு நடத்தினார் சிவசண்முகம்அவர்களுக்கு,டில்லி தமிழ் சங்கம் இருக்கே, அந்தச் சங்கம், காமராஜர், சுப்பிரமணியம் ஆகியோருக்கு வரவேற்பு அளித்தது. அவ்வளவுதான், தேசீயம் அங்கேஉள்ள வடக்கத்தியார் நடத்தியதல்ல வரவேற்பு!!

தேசீயம்:- சரி...உம்மோட வாய்க்கு ஒரு பிடி அவல்கிடைச்ச மாதிரிதான்..

கழகம்:- நான் வரட்டுமா, தேசீயம், அவசரமாப்போகணும், ஒருவிருந்துக்கு......

தேசீயம்:- விருந்தா!எங்கே?

கழகம்:- என் வீட்டிலேதான்! சாப்பிடுங்க, சாப்பிடுங்கன்னு நம்ம சமயல்காரன்உபசாரம்செய்வான். அந்தவிருந்துக் குத்தான்.........

தேசீயம்:- உம்மவீட்டிலே சாப்பிடறதுக்கு, விருந்துன்னு என்ன பேராம்......!

கழகம்:- நம்மதமிழர்கள் நம்மதலைவர்களுக்கு, டில்லியிலே நடத்திய, வரவேற்புபோல, இதுநமக்கு நம்மவீட்டிலே நடத்தப்படுகிற விருந்துன்னு எண்ணிக்கொள்ளப் படாதோ...!!

★

# சலாசர் சிரிக்கிறான்!

சலாசர் சிரிக்கிறான்! எனக்குத்தெரியும்—முன்னமேயே தெரியும்—அவர் நல்லவர்—நேரு பண்டிதர் ரொம்ப நாசுக்கானவர்—அவர் 'இதுகளின்' தலையில் குட்டி உட்காரவைப்பார் என்பது எனக்கு முன்பே தெரியும்!— என்று கூறிக் கூறிச் சிரிக்கிறான்.

ஆணவம் இருக்கத்தான் செய்கிறது, அந்தச் சிரிப்பில்—அழிவதற்கு முன்பு ஆதிக்க வெறியர்கள் ஆணவம் கக்கத்தான் செய்வர், எனினும், சலாசர், கைகொட்டிச் சிரிக்கும் படியான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம், காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள 'காட்டிக் கொடுக்கும்' தீர்மானமேயாகும்.

போர்ச்சுகீசிய வெறியரின் பேயாட்டம்! கோவாவில் இரத்த வேட்டை! என்று நாடெங்கும் பல நாட்களாக கண்டனம் அலை அலையாகக் கிளம்பிற்று.

வீரர்கள், வீராங்கனைகள். செயற்கரிய தியாகம் புரிந்து, குருதி கொட்டி, அடிமைக் கரையைக் கழுவிடப் பணி புரிந்தனர்.

ஈவு இரக்கமின்றி, காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போல, நாடு மீட்கும் அறப்போரில் ஈடுபட்டோரை, போர்ச்சுகீசிய வெறியர்கள் சுட்டுத் தள்ளினர். இந்த வீர சம்பவங்களை நேரு பண்டிதர், கண்ணீர் ததும்பிய படி, போற்றினார்! போர்ச்சுகல் போக்கைச் சாடினார்! இதனால் புத்தார்வம் கொண்டோர், களம் நோக்கிப் புறப்படலாயினர்! இப்போது, யாரும் எதிர்பார்க்காத முறையில், இனி சத்யாக்கிரகம் கூடாது என்று காங்கிரஸ் தீர்மானித்து விட்டது. காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டோம் என்று கனலும் புனலும் நிரம்பிய கண்ணினர் கூறுகின்றனர்.

கோவாவில் சத்யாக்கிரகம் செய்வதற்குச் செல்பவர்களை, சலாசர் தீண்டுவதற்கு முன்பே, இப்போது நேரு பண்டிதருடைய சர்க்கார், பிடித்திழுத்து வெளியே துரத்துகிறது!!

உள்ளே நுழையாதீர்கள். நுழைந்தால் சுட்டுத் தள்ளுவேன் என்று சலாசர் கொக்கரிக்கிறான்.

உள்ளே நுழையாதீர்கள், நுழைய அனுமதிக்கமாட்டோம், மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும், என்று நேரு சர்க்கார் கூறுகிறது.

நேருவின் இந்த விபரீதப் போக்கினால் மனம் குமுறிக் கொதித்தெழும் விடுதலை வீரர்கள், முன்பு திரண்டது போல நூற்றுக் கணக்கில், கோவா எல்லையில் சென்றால், தடையை மீறி உள்ளே நுழையத் தொடங்கினால் சலாசருக்கு வேலை இல்லை, நேரு சர்க்காரின் துப்பாக்கிகளுக்குத்தான் வேலை கிடைக்கும் போலிருக்கிறது. நிலைமை, இந்த விபரீதக் கட்டம் அடைந்திருக்கிறது.

சலாசர், "நம் வேலையை நேருவிடம் ஒப்படைத்து விட்டோம்" என்று எண்ணிக் கொள்ளலாம் போலிருக்கிறது.

சென்ற ஆண்டு இதுபோன்ற சத்யாக்கிரகம் திட்டமிடப்பட்டபோது நேரு பண்டிதர் திட்டவட்டமாக இது கூடாது என்று தெரிவித்து விட்டார், எனவே இரத்தக் களறி ஏற்படவில்லை.

இந்த ஆண்டு, சத்யாக்கிரகம் திட்டமிடப்பட்டபோது, நேரு பண்டிதர், துவக்கத்திலேயே தடுத்திருந்தால், சர்வ தேசப் பிரச்சினைகளை உத்தேசித்தும் இந்திய சர்க்காரின் கொள்கையை உத்தேசித்தும், இத்தகைய 'சத்யாக்கிரகம்' முறையல்ல, தேவையில்லை, அனுமதிக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டிருந்தால்' இரத்தக் களறி ஏற்பட்டிராது!

இருகரம் முன்பு — இப்போது ஒரு கரம், காண்பீர்! மற்றொன்று, வெறியரின் குண்டுக்குத் தந்தேன்! அந்தக் கரம், போர்ச்சுகீய ஏகாதிபத்யத்துக்கு மரணதண்டனை எழுதும், காண்பீர்!— என்று கூறுவதுபோல கரமிழந்த ஓர் மாது காட்சிதரக் காண்கிறோம்,

கல்லூரி மாணவர்கள், பரணிபாடிச் சென்றனர், படுகொலை செய்யப்பட்டனர்!

வீர இளைஞர்கள் அடித்து வீழ்த்தப் பட்டனர்.

நாடு கதறிற்று, நல்லோர் பதறினர்; நானிலம் கண்டித்தது!

இவ்வளவு இரத்தச் சேறும் ஏற்படாத வண்ணம் நேரு பண்டிதர் தடுத்திருந்திருக்கலாம்—துவக்கத்திலே, சத்யாக்கிரகத்துக்குத் தூபம் போடும் விதமாக நடந்துகொள்ளாது இருந்திருந்தால்.

தூபம் போடப்பட்டது! துந்துபி முழக்கப்பட்டது! துப்பாக்கிதுளைத்தது! இப்போது, அதனினும் கூரிய தீர்மானம் துளைக்கிறது!

இப்போது, சத்யாக்கிரகம் கூடாது என்று தீர்மானம் தரும் நேரு பண்டிதர், ஏன் ஆகஸ்ட்டு பதினைந்தில் அது நடைபெற இடமளித்தார்! பெருமைப்படப்பேசினாரே! பாராட்டுரை வழங்கினாரே! இன்று ஏன், தடை? தடை போடுவதுதான், முறை என்றால், அதை முன்பே செய்திருக்கலாம்—இவ்வளவு 'இரத்தம்' பெருக்கெடுத்தோடி இருக்க வேண்டாமே! காதலனை இழந்த காதலியின் கண்ணீரை, மகனை இழந்த தாயின் கண்ணீரைக் காண்பதிலே, நேரு பண்டிதருக்குமா ஆனந்தம், சலாசர் எனும் வெறியனுக்கு ஆனந்தம் இருக்கலாம். இவருக்குமா! ஏன்? ஏன் அனுமதித்தார்?

சலாசரின் துப்பாக்கி நீண்ட நாளாகத் துருப்பிடித்து இருக்கிறது, அதற்குச் சிறிதளவு வேலை தருவோம் என்று எண்ணியா, துவக்கத்தில் சத்யாக்கிரகத்தைத் தட்டிக்கொடுத்து, அனுமதித்தார்! எண்ணிப் பார்த்திடும் போது, சலாசர் டில்லியில் இருப்பிடம் கொண்டானோ என்றல்லவா கேட்கத் தோன்றுகிறது.

இந்த இலட்சணத்தில், 'கோவா, கிடைத்ததும், அது யாருக்கு? என்பது பற்றிய விவாதம், காங்கிரஸ் வட்டாரத்திலே கிளம்பிவிட்டது.

கர்நாடகப் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா சொல்கிறார், கோவா, கர்நாடகத்துக்குத்தான் சொந்தம், எனவே 'விடுபட்டதும்' அது எம்மிடம் தரப்படட்டும்!

அவர் எப்படி கோவாவைக் கேட்கலாம்! கோவா, கர்நாடகத்துக்கு உரியதல்ல — அது கொங்கண நாட்டுக்கு உரியது! என்கிறார், புருஷோத்தமமல்லய்யா என்பவர்.

கோவாவில் பேசப்படும் மொழி கொங்கணி, கொங்கணி திராவிட மொழிகளிலொன்று அல்ல; அது ஆரிய மொழி; எனவே கோவா, கொங்கணத்துக்குத்தான், என்று இந்த மல்லய்யா வாதாடுகிறார்; கொலாபாவிலிருந்து கோகர்ணம் வரை, கொங்கணம் என்று ஆக்கித் தருக, என்று அவர் கேட்கிறார்.

சலாசர் சிரிக்காமலிருப்பானா!

'சத்யாக்கிரகம்' தடுக்கப்படுகிறது— நேரு பண்டிதரால்!

சத்யாக்கிரகம், தவறானது, சட்ட விரோதமானது, வீணாக மற்றோர் வல்லரசின் மீது வம்பு தொடுப்பது, என்பதை உணர்ந்த நேரு பண்டிதரே, இப்போது, சத்யாக்கிரகத்தைத் தடுத்து விட்டார், என்று, தன் நாட்டுக்கும், பிற நாடுகளுக்கும் குறிப்புகள் அனுப்பிவிட்டு, குதூகலமாக இருக்க, சலாசருக்கு வழி கிடைத்திருக்கிறது. வீழ்ந்து பட்ட வீரர்கள், கேலிக்குரியவர்களாக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் கொட்டிய குருதி வீணாக்கப்படு படுகிறது! காட்டிக் கொடுத்து விட்டார் பண்டிதர்!! கை கொட்டிச் சிரிக்கிறான், சலாசர்!

★

# ஆலமரத்துப் பிள்ளையார்

[வண்டு]

அதிர்ஷ்டம் அடித்தது எங்கள் ஊர்ப் பிள்ளையாருக்கு. இத்தனை நாட்களும் ஆலமரத்துக்கு அடியிலே கிடந்த அவருக்குக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்ய முன்வந்தார் பெரியபண்ணை பெருமாள் செட்டியார். காக்கையும், கழுகும், புருக்களும், சிட்டுகளும் 'அர்ச்சனை' செய்ய, கிடந்த பிள்ளையாருக்குப் பூஜை செய்வதற்காகக் குருக்கள் ஒருவரும் அமர்த்தப்பட்டுவிட்டார். பெருமாள் செட்டியாரோ காலையும் மாலையும் வலம்வந்து, கோயிலை எப்படியெப்படிக் காட்டலாம் என்பது பற்றி எல்லோரையும் ஆலோசனை கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு ஏற்பட்ட திடீர்பக்தி குறித்து அக்கம் பக்கத்திலிருப்போரெல்லாம் ஆச்சரியப் பட்டனர். அந்த ஆச்சரியத்தின் அளவைப் புரிந்து கொள்ளாதவரல்ல அவரும். தான்கோயில் கட்டமுடிவு செய்தது பற்றி, அவரே கூறுகிறார் கேளுங்கள்.

"அர்த்தஜாமம் இருக்கும். நல்லா, தூங்கிகிட்டு இருந்தேன். திடீர்னு யாரோ தட்டி எழுப்பியதுபோல இருந்தது. பார்த்தால் எதிரே, நின்றார் பிள்ளையார். அவருடைய கண்ணிலிருந்து நீர் வடிந்துகொண்டிருந்தது. பதைத்துப்போனேன்! அப்பனே! இதென்ன? யார், உனக்கு அபசாரம் செய்தார்கள்? என்று கேட்டேன்! "பக்தா! பூமிக்குள் கிடந்த என்னை வெளியிலே எடுத்துப்புண்ணியம்தேடிக்கொண்டாய். யாராருக்கோ என்னென்னமோ செய்யும் நீ, எனக்குகந்த ஒரு குச்சு கட்டிக் கொடுக்கக்கூடாதா? காக்கை துப்புகிறது, தின்று மென்ற கொட்டைகளை! பறவைகள் சிந்தும் எச்சமெல்லாம் என் தலையில்! பக்தா—இதைப் பார்த்தும் பார்க்காதவனைப் போலிருக்கலாமா? இதற்கு, நீ என்னை பரமன் நிலத்திலேயே போட்டிருக்கலாமே. ஏன், தோண்டி எடுத்தாய்?" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை! கண் விழித்துப் பார்த்தேன் ஒன்றும் இல்லை. காலையில் எழுந்ததும் ஆலமரத்தடிக்குப் போய்ப் பார்த்தேன். கண்ணீர் வடிந்து உறைந்து போயிருந்தது தெரிந்தது! கனவில் கண்டது அனைத்தும் உண்மை யென்று விளங்கிற்று. எப்படியிருக்கும் மனசு? பரமன் நிலத்திலிருந்து எடுக்க என்னென்ன கஷ்டப் பட்டேன்? சாமான்யத்தில் தருகிறேன் என்றானா நிலத்தை. எண்ணிக் கொடுத்தேன் பணம் இனாமாக. பிள்ளையாருக்கு நிழலிருக்க வேண்டும் என்பதற்காக ஆலமரமும் வைத்து, கழனிக்காடாயிருந்த நிலத்தைப் பணம் செலவழித்து மேடாக்கினேன், இப்போது அவர் கஷ்டப்படுவதைக் கண்டால் மனம் கேட்குங்களா? அதனால்தான், கோயில் கட்டுவதுன்னு முடிவு செய்து, கோயில் பூஜை தினசரி நடைபெறுவதற்காகவும் சொத்தில் ஒரு பாகத்தை எழுதிவைக்க முடிவு செய்தேங்க! நாஸ்திகர்கள் பெருகிவிட்ட இந்தக்காலத்திலே நம்மைப் போன்றவங்கதானே, இயன்றதைச் செய்துபாமர ஜனங்கள் மத்தியிலே பக்தியைப் பரப்பணும். இல்லீங்களா?"

பக்தி ரசம் ததும்ப, பெருமாள் செட்டியார், சொல்கிறார் இப்படி. பரமன் என்று சொன்னாரே, அவனைப் பார்ப்போம்—அதோ கோயிலுக்காக கல் தூக்கிக்கொண்டிருக்கிறானே, மனைவி அஞ்சலையுடன் — அவன்தான், அவன் சொல்லுவதைக் கேட்கலாம்— வாருங்கள்:—

"சாமி, அந்தப் பிள்ளையாராலே தாங்க என் குடும்பமே, இந்தக் கதிக்கு வந்துது. பாட்டன் முப்பாட்டன் காலமா, எனக்குன்னு இருந்த நிலம், அந்தப் பிள்ளையாராலே தாங்க போச்சு. மேடாகி, ஆலங்கன்னு முளைச்சு இருக்கிற இந்த இடத்திலே, ஒரு காலத்திலே நானும் அஞ்சலையுமா காலையிலே யிருந்து பாடுபடுவோங்க— முப்போகம் விளையும். அதைக் கொண்டு நாலுபேரைப்போல நாங்களும் கவுரவமா வாழ்ந்துக்கிட்டிருந்தோம். என் நிலத்தைச் சுற்றி, பெரிய பண்ணை ஐயா நிலம் தாங்க இருந்துச்சு. கடலிலே ஒரு துளி மாதிரி, என் நிலம் இருந்தது, அவர் கண்ணை உறுத்திகிட்டே யிருந்தது—எனக்குத் தெரியாமெ இல்லே. இரண்டாயிரம் தர்றேன் கொடுத்திடு—மூவாயிரம் வேணுமானாலும் தர்ரேன்னு கேட்டாருங்க. முடியாதுன்னு சொல்லிட்டேன். பாருங்க அந்த நேரமாப்பார்த்தா, இந்தப் பிள்ளையார் வந்து முளைக்கணும். ஒரு நாள் ஏர் உழுதுகிட்டு இருந்தேன் — 'டங்'குன்னு சப்தம் கேட்டுது. ஏதோ புதையல்னு நினைச்சு ஒட்டமா வீட்டுக்கு ஓடி, அஞ்சலையை அழைச்சு

## விஞ்ஞானம்

"சம்சாரம் ஒரு சாகரமப்பா! சனியனப்பா, எனக்கு வாய்த்தது—மூளி அலங்காரி-'மூணும்பேஸ்து, மாதிரி— எப்போது பார்த்தாலும் முக்காடும் மூலையும்தான்கதி,. என்று குறைபடுவோருக்கும்

"நல்லவனாக இருப்பான் என்று தான் எண்ணினேன். நயவஞ்சகன்! துரோகி! தொழிலில், எனக்கு 'சகுனி, யாக இருக்கிறான். இவனை, ஏன், கூட்டுச்சேர்த்து கொண்டேனோ?,, என்று முகஞ்சுளிப்போருக்கும்; ஒரு நூதனமான கருவிகண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம்—கவலைபோக்க!

இந்தக்கருவியால், ஒவ்வொருமனிதருடைய மூளைரேகைகளைப்படம்பிடித்து அதைக்கொண்டு—இந்தச்சுபாவத்துக்கும் அந்தச்சுபாவத்துக்கும் ஒத்து வருமா; இவர்களிருவரையும் தம்பதிகளாக்கினால் வீணையும் நாதமும்போல வாழ்க்கை நடத்துவார்களா-என்பதையெல்லாம், கணக்கிடலாமாம். மாயமல்ல, மந்திரமல்ல! விஞ்ஞானக்கருவி, இது!!

பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் வால்டர் என்பார், விரைவில் இந்தக்கருவிகள், உலகமுழுமையும் வினியோகிக்கப்படலாம் என்றும் அறிவித்திருக்கிறார்.

செய்தியைக் கேள்விப்படும் ஜோசியர்கள்-பெயர்ப்பொருத்தம் பார்ப்பவர்கள்—நட்சத்திரப்பொருத்தம் கணிப்பவர்கள்—பூ, வைத்துமுடிவுசெய்யும் பூசாரிகள்முதலியோர், திகைக்கநேரிடலாம்—தமது 'வேட்டை'க்கும் ஆபத்து வருகிறதே என்று.

கிட்டு வந்து நானும் அவளுமா கஷ்டப்பட்டுச் தூக்கிப் பார்த்தா இந்தப் பிள்ளையார், 'சரின்னு அதைத் தூக்கி அப்பாலேவைச் கிட்டு உழ ஆரம்பிச்சேன் — அப்பொழுது அந்தப் பக்கமா வந்த பெரிய பண்ணையார் சுண்ணிலே பிள்ளையார் பட்டுட்டாருங்க. விபரத்தைச் சொன்னேன். "டேய், பரமா ...நீ பாக்கியசாலிடா....யாருக்குடா கிடைக்கும் இந்த அதிர்ஷ்டம்? பிள்ளையார், இருந்தஇடம் பெருமையான இடம் பரமா ...எனக்கு வரக்கூடாதா இந்தப் பாக்கியம்... ஊம்!" ...என்று பெருமூச்சு விட்டபடியே, அவர் சொன்ன வாசகம் என்னைத் திகைக்கச் செய்தது. சாமியிருந்த இடம் சாமிக்குச் சொத்தாம், அதிலே உழக்கூடாதாம், ஆண்டவனுக்குக் கோபம் வந்துவிடுமாம்,— யாருக்கிட்டேங்க போய்ச் சொல்லுவேன்? ஊருக்குப் பெரிய மனுஷன் அவரு..... இப்படிச் சொல்ருரு...... என்னுலே ஆனவரைக்கும் எதெதோ சொல்லிப் பார்த்தேன். பிள்ளையாரைத் தூக்கி, வேறு எங்காவது வைச்சுக் கும்பிட்டா, என்னங்கன்னு கேட்டேன். ஏழைப் பேச்சு அம்பலம் ஏறுமா? ஊர்ப் பஞ்சாயத்து கூடிச்சு—சாமிமுளைச்ச இடத்தை வெட்டுறதும், கொத்தறதும் கூடாது—ஊருக்கு அடுக்காதுன்னு சொல்லி, சுற்றி வேலி போடணும்னுங்க. எனக்கு இருந்த ஒரே சொத்து அதுதான் அதைவிட்டா என் குடும்பம் ஆலாப்பறக்க வேண்டியதுதான். "ஐயோ, தருமதுரைங்களே —இப்படி நீங்களே சொல்லிட்டா என் குடும்பம் போறகதி என்ன?" என்று சொல்லிக் கதறினேன். பெரிய பண்ணை ஐயாகாலைக்கட்டிக்கிட்டு அழுதேன்—பெரிய 'தர்மம்' பண்றவர்போல, "பரமா! உன் நிலைமையைப் பார்க்க ரொம்பக் கஷ்டமாத்தான் இருக்கு...ஆண்டவன கிருபை இப்படி!........ஏதோ உன்னைச் சோதிக்கிருர் — கவலைப்படாதே, நான் ஒரு ஐந்நூறுரூபாய் உனக்காகத் தர்றேன். அதை வைச்சுகிட்டு எப்படியாது பிழைச்சுக்க"ன்னு சொன்ருரு. 500-ரூபா தாள்! என் தாய்க்குப்பதில் 500-ரூபா. என்னசெய்யமுடியும்? கண்ணைத் துடைச்சிகிட்டு பேசாமெ வாங்கிக்கிட்டேன். ஊர்ப் பஞ்சாயத்தே அதுதான் முடிவுன்னு சொன்னதுக்கப்புறம் ஏழை என்ன செய்யமுடியும்? நிலத்தை, என்னைக் கொண்டே, மேடாக்கினர் அவர்— ஆலங்கன்னுவைக்க, அதுக்குப் பக்கத்திலே பிள்ளையாரையும் வைச்சார்—அது முதல், அந்த ஆலங்கன்னைக் கவனிக்கிறதும் அவருகூப்பிட்டகுரல் கேட்கிறதும் தான் எனக்கு வேலைங்க. ஐயாவுக்கு, இப்ப இந்த இடம், நல்ல களத்து மேடா ஆயிட்டுது. அறுவடைக்கட்டுகளைக் கொண்டாந்து போட்டு, நெல் அடிக்கிறது இந்த இடத்திலேதாங்க......ஒரு காலத்திலே என் குடும்பத்திலே சந்தோஷமா விளக்கு எரியச்செய்த பூமியம்மாமேலே, இந்தப் பாவியே இப்ப கல்லை அடிக்கிக்கிட்டு இருக்கேன்?"

பரமனிடம், இன்னுமிருந்தால் அவன்கூடச் சேர்ந்து நாமும் அழவேண்டியவர்களாகிவிடுவோம். அதோ. கருங்கற்களைச் சிலையாக்கிக்கொண்டு கோயில் கட்ட முஸ்தீபு செய்துகொண்டிருக்கிருனே, சிற்பி சிதம்பரம் அவன் ஏனோ, பரமன் அழுவதைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டேயிருக்கிருன். வாருங் பார்ப்போம்.

"என்னங்க, ஏதோ உங்களிடம் சொல்லி, அழுதுகிட்டு இருந்தான் போலிருக்கே பரமன், அப்படித் தாங்க அழுவான். ஆனுல், நிலம் இருக்கிறது என்கிற அகம்பாவத்திலே, என் அத்தைமவ அஞ்சலையைக் கலியாணம் செஞ்சிகிட்டப்ப, எவ்வளவு திமிராயிருந்தான் தெரியுங்களா? அஞ்சலை, என் அத்தைமவ. என் வீட்டிலேயிருக்க வேண்டிய விளக்கு. சொத்து இல்லாதவன்னு சொல்லி, எனக்குக் கொடுக்கமாட்டேன்னுட்டாங்க. அந்தக் குட்டியும், அவனைத்தான் கட்டிக்குவேன்னு சொன்னுளாம், கலியாணம் ஏக அமர்க்களமாத்தான் நடந்துச்சு. ஆனுல் என் மனம் எவவளவு துடிச்சுது தெரியுங்களா? ஒரு துண்டு நிலம்—அது அவனுக்குச் சொந்தமாயிருக்கிறதாலே, ஊர் உலகம் அவனை ஒரு பெருமையாத்தான் நினைச்சுது— அதை நினைக்க நினைக்க என்

# ஆவடி சோஷியலிசம்

ஆவடியில்தானே, சோஷியலிசம் மாதிரி' இனி நாட்டுக்கு ஒரு திட்டம் தருகிறேம் என்று காங்கிரசில் தீர்மானித்தார்கள். பொருத்தமான இடத்திலேதான்காங்கிரஸ் நடைபெற்றது என்பதற்கு இப்போது தகுந்த விளக்கம் கிடைத்திருக்கிறது.

ஆவடியில் காங்கிரஸ் கூடிய இடம் இருக்கிறதே, அது நமது சர்க்காருக்குச் சொந்தமானது அல்ல!

மலாய் நாட்டுக்குச் சொந்தமான இடம்.

190 ஏகர் பரப்புள்ள இந்த இடம் நீண்டகாலமாக மலாய் சர்க்காரின் உடைமையாக இருந்து வருகிறது.

இதை இப்போது விலைகொடுத்து வாங்க 'பேரம்' நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 15-இலட்ச ரூபாய் தர, சென்னை சர்க்கார் இசைகிறது. மலாய் சர்க்காரிடம் இதற்கான 'பேச்சு' நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தப் 'பேரம்' யார் மூலம் நடக்கிறது என்று எண்ணுகிறீர்கள்?

இதென்ன கேள்வி! நமது சர்க்காரின் தூதுவர்கள் இந்தக் காரியத்தைப் பார்த்துக்கொள்ள மாட்டார்களா—வேறு எதற்குத்தான் கொள்ளைப் பணம் செலவிட்டு, தூதர்களை வைத்திருக்கிறேம் என்று கேட்பீர்கள்.

**ஆவடி நிலத்தை வாங்குவதற்கான பேரம், 'தூதர்' மூலம் நடைபெறவில்லை முருகப்பசெட்டியார் எனும் முதலாளிமூலம் நடைபெறுகிறது.**

அவருக்கு என்ன இதிலே வேலை? என்று கேட்பீர்கள்.

சென்னை சர்க்கார், செட்டியாரைக் கொண்டுதான் 'பேரம்' நடத்தி வருகிறது.

செட்டியாருக்கு இதிலே என்ன இலாபம்? என்பீர்கள்.

இலாபம் கிடக்கட்டும்! ஒரு சர்க்காரின் சார்பில் மற்ருேர் சர்க்காரிடம், சொத்து வாங்கும் விஷயமாக (தூதுவர்கள் இருக்கும்போது,) தனக்கு 'பேரம்' பேசி, முடித்துத்தரும் 'அந்தஸ்த்து' அளிக்கப்படுவது என்ருல், சாதாரணமான கௌரவமா அது!

மேலும், இந்த 190 ஏகர் நிலம் சென்னை சர்க்காருக்குக்கிடைத்ததும், அதில் பாதியில், ஸ்பெஷல் போலீஸ் முகாம் அமைக்கிருர்கள், சர்க்கார்! மற்றப்பாதியில், முருகப்பச்செட்டியார் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப் போகிருர்! பாதி சர்க்காருக்கு! பாதி செட்டியாருக்கு!

தொழிற்சாலை ஒரு பகுதியில்: மற்ருேர் பகுதியில் ஆயுதந் தரித்த ஸ்பெஷல் போலீசாரின் விடுதி!

புரிகிறதல்லவா, ஆவடி சோஷியலிசம்!!

மனம், அக்னிக் குழம்பாகிக்கிட்டே யிருந்துதுங்க. அந்த நிலம் அவனிடம் இருக்கிறதாலே தானே இவ்வளவு திமிராயிருக்கான்னு, சதா எனக்கு எப்பவும் இதே கவலை தாங்க. கவலையைப் போக்கிக்கொள்ள நேரம் வந்தது. பெரிய பண்ணை ஐயா, சாப்பிட்டு அந்த யோசனையைச் சொன்னதும் உடனே சம்மதிச்சேன். அவன் நிலத்தை, நாளைக்குக் கொடுக்கமாட்டான்—கட்டாயப்படுத்தி வாங்கினாலோ ஊர் ஒரு கோடி பேசும். ஊர் வாயையும் மூடணும்; அதே சமயத்திலே, அவன் கிட்டேயிருந்து நிலத்தையும் பிடுங்கணும்—அதுக்கு பெரிய பண்ணை ஐயா சொன்ன யோசனை ரொம்பப் பிரமாதம்னு என் மூளையிலே பட்டதுங்க; சொன்னால், நீங்க நம்பக்கூடமாட்டீங்க—'பைத்தியக்கார'ன்னு தான் ஊர் சொல்லும்—உண்மை என்ன தெரியுங்களா, பூமிக்குள்ளேயிருந்து முளைச்ச பிள்ளையார்னு, எல்லோரும்நினைச்சுகிட்டு இருக்காங்களே—அது, நான் செஞ்சதுங்க, இந்தக் கையாலே. யாருக்கும் தெரியாமெ இரகசியமா செய்து அதைவிட இரகசியமா ஒரு ராத்திரி நானும் பெரிய பண்ணை ஐயாவுமாப் போய்க் குழி தோண்டி அவன் நிலத்திலே வைத்துவிட்டு வந்தோமுங்க. இப்ப என்னடான்னா, நான் இருக்கிறப்பவே சொல்றாரு பெரிய பண்ணை ஐயா—"கனவு கண்டேன், அதுக்காகக் கோயில் கட்டப்போகிறேன்—பூமியிலேயிருந்து முளைச்சப் பிள்ளையாரோல்லியோ? சக்தி அதிகமாத்தான் இருக்கும்,"—என்றெல்லாம். சொல்லிட்டுப் போகட்டும்-எனக்கென்ன? கோயில் கட்டுவதாலே ஒரு நாலு மாசத்துக்கு எனக்குப் பொழுப்பு இருக்கு, நிலமில்லேங்கிறதாலே என் அத்தைமவ என்னை அலட்சியமா நினைத்தாளே முன்பு, இப்ப அவளும் அதோ, கல் தூக்கிறா தலையிலே, பரமனைப் பாருங்க, ஐயா, ஏன் திடீர்னு கோயில் கட்ட ஆரம்பிச்சாரு...இந்தச் சந்தேகம் எனக்கும் ஏற்படாம இல்லே எச்சல் கையாலேகூட காக்கா ஓட்டமாட்டாரே, ஊம்...என்ன இரகசியம் இருக்குதோ? ஐயாவொடெ இரகசியத்தை நிறைவேற்றிவைக்கத் தான் நாங்க ஆளேஒழிய இதைப் பற்றியெல்லாம் ஆலோசிக்க ஐயாவுக்கு பட்டணத்திலே வக்கீல் வரதாச்சாரியிருக்காரே, அவரைப் பார்க்கமுடிந்தா—கேளுங்க, விபரம் புரியும்."

அந்த விபரத்தை, 'பார்யாள்' மங்களத்திடம், தெரிவிக்கவில்லை வக்கீல் வரதாச்சாரியார். அழகான பங்களா—காரிலேயிருந்து இறங்கி கனகுஷியாக நுழைகிறார் வரதாச்சாரி—கையிலே மின்னுகிறது ஒரு வைரநெக்லஸ், ரூபாய் மூவாயிரம் தாளும். சோபாவில் சாய்ந்து கொண்டிருக்கும் மனைவியின் கண்ணெதிரே கொண்டுபோய் நீட்டுகிறார். ரோஜா மலருக்கு சிவப்பு ஏற்றுவது போல, அந்த அம்மையின் கன்னங்களாகின்றன, ஆனந்தத்தால்.

"ஏது? நெக்லஸ்,"

"ஏதுன்னுகேட்கிறீயே, என்னைப் பார்த்து இப்படியெல்லாம் கேட்காதேடீ...இந்த மாதக் 'கோட்டா' நெக்லஸ்...அடுத்த மாதம் என்ன வேணும் கேள்!"

அம்மையாருக்கும் அவருக்கும் இனிமேல் நடக்கும் ரசமான வாதம் நமக்குத் தேவையில்லை, ஆனால், மனைவியிடம் வரதாச்சாரி 'ஏது' என்பதற்கு விளக்கம்சொல்லியிருந்திருந்தால்... "பெருமாள் செட்டி கோயில் கட்டுறதைப் பற்றி பெரிய பக்திமான்னு ஊரெல்லாம் பேசறா—பத்திரிகையிலெல்லாம் அவன் படம்வந்திருக்குது! ஜமாய்க்கட்டும், எது எப்படியானாலும், நமக்கு லாபந்தான். ஆனால் இந்தக் காரியம் பக்தியாலே செய்றான்—போறகதிக்கு நல்லதுதேட செய்றான்—பிள்ளையார் கனவிலே வந்து சொன்னதாலே செய்யறான்—அப்படி இப்படீன்னு பேசறாளே, அதை நினைச்சாத்தான் சிரிப்பு வருது, என்ன ஜனங்க — எது சொன்னாலும் நம்புற ஜனங்க. காதும் காதும் வைச்சாப்போலே உனக்குமட்டும் சொல்றேன். அடியே, சர்க்காரிலே நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்போவதாகவும், அதன்படி இத்தனை வேலி நிலம் தான் ஒரு மிராசுதார் வைத்திருக்கலாம்னு சட்டம் வரப்போவதாகவும் பத்திரிகையிலேயெல்லாம் போடறாளே, பார்த்தயேல்லியோ? அதைப் பார்த்துப் பயந்துபோய் என்னிடம் வந்தான், பெருமாள் செட்டி.

ஏன்யா, சங்கடப்படறே — சர்க்கார் உடனே இன்னும் சட்டம் கொண்டு வந்துடலே — கொண்டாராப் போறதா சொல்லிகிட்டேயிருப்பது எதுக்குத் தெரியுமோ? உன்னைப்போல இருக்கிற மிராசு, மிட்டாக்கள் எல்லாம் ஏதாவது ஒரு ஏற்பாட்டை செய்துக்கச் சொல்லித்தான்—காலதாமதம் செய்றா. நோக்கு இருக்கிறதோ 500 வேலி—அதைப் பெண்டாட்டி பேருக்கு, பிள்ளைங்க பேருக்கு — அத்தை, மாமன், மச்சான் இப்படி ஒவ்வொருத்தருக்கும் பிரிச்சுக் கொடுத்துடுன்னு சொன்னேன். அப்படிச் செஞ்சாலும் மிச்சம் வருதே, சாமின்னான். அப்பொழுதுதான் இந்த யோசனையைச் சொன்னேன். கோயில் ஒண்ணு கட்டு. அதுபேருக்கு ஒரு நூறு வேலியை எழுதிவைச்சு, உன்னுடைய வாரிசுகள் என்றென்றைக்கும் 'தர்மகர்த்தாக்களாக'யிருந்து கோயிலுக்கான உற்சவாதிகளைச் செய்யணும்னு எழுதிடுவோம்—சாமிக்கு இருக்கிற சொத்துக்குச் சட்டம் கொண்டுவரமாட்டாங்க சர்க்கார். அப்படி வந்தாலும், விட்டுவிடமாட்டோம் நாங்கள்ளாம். நம்ம வாரிசுகள், கோயில் பேராலே என்னைக்கும் அனுபவிக்கலாம். இந்த யோசனையைச் சொல்லி ஏற்பாடு செஞ்சதுக்காகத்தான் பீஸ் ரூபாய் மூவாயிரம் உன் கழுத்திலே 'நெக்லஸா' மாறி மின்னுது, கோயிலும் ஆடம்பரமா கட்டிண்டிருக்கிறான். நம்ம அம்மாஞ்சியோடெ மகன் இருக்கானேல்லியோ ஒரு அசடு—பள்ளிக்கூடம் போகாமெ ஊர் சுத்திண்டு இருந்துதே—அதையே கோயில் குருக்களாவைச்சுக்கவும் சொல்லியிருக்கேன். காசா, பணமா-வாயாலே நாலுவார்த்தை. கோயில் பெரிசா எழும்பிக்கிட்டு இருக்கு. பெருமாள்செட்டியும் பெரிய தர்மவானாயிட்டான்,,.

* * *

'விநாயகசதுர்த்தி'யன்று விசேஷ கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஊரே திரண்டு வந்தது, மகாசக்தி விநாயகர் என்று அனைவரும் கொண்டாடுகிறார்கள். இந்த அரிய கைங்கரியத்தைச் செய்ததற்காக பெரிய பண்ணைக்கு 'தர்மதாதா, என்று பட்டம் அளிக்கப்பட்டது, அந்த பட்டமளிப்பு விழாவுக்கு மூன்று மந்திரிகள் வந்தனர், கவர்னர் வாழ்த்துச்செய்தி அனுப்பி இருந்தார்.

★

# வேலை கிடைத்தது!

[கற்பனைக் கருத்தோவியம்]

## தேவை

**நமது 'சுக்கிரன்' பத்திரிகைக்கு ஒரு பிரத்தியேக நிருபர் தேவை. குறைந்தபட்சம் B. A. படித்தவராகவும், இந்தியும் தமிழும் எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள், தமது மனுவுடன் ஐந்து ரூபாய் கட்டணமும், நற்குணத்தைப் பற்றிய சர்ட்டிபிகேட்டும் அனுப்ப வேண்டும். மாதச் சம்பளம் ரூ. 200. தகுதி பார்த்துச் சம்பளத்தைக் கூட்டியும் தரப்படும்.**

*

"இதைப் பார்த்தேளா? பேந்தப் பேந்த விழிச்சிண்டு இருந்தது போதும், இதோ பாரும், விளம்பரம் வந்திருக்கு—" என்று கூறி **கோமளம்,** அந்த வாரத்து 'சுக்கிரன்' பத்திரிகையை, 'சுந்தர காண்ட'த்தை மார்மீது வைத்துக்கொண்டு, ஈசிசேரில் படுத்தபடி, எதிரே சுவரிலே இருந்த ரவிவர்மா படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சதானந்தம் M.A.B.L., இடம் கொடுத்துவிட்டு, மெல்லிய குரலில் சங்கராபரண ஆலாபனம் செய்யத் தொடங்கினாள்.

சதானந்தம் M. A. படித்துக்கொண்டிருந்தபோது, கோமளத்தைப் 'பாணிக்கிரகணம்' செய்துகொண்டு, அந்த இடத்து உதவியால் B. L. ஆனார். கோமளத்தின் 'தோப்பனார்' பிரபல ஜோதிடர், ஆனால், தமக்கு வாய்த்த மாப்பிள்ளை வாயில்லாப் பூச்சியாக இருக்கும் என்று தெரிந்துகொள்ளவில்லை. கோர்ட்டில், தூங்கிவிழத்தான் முடிந்தது—ஒரு 'கேசும்' தருவதற்கு ஆளில்லை.

**கோமளம்,** நல்ல சாரீரம் படைத்த அழகி. ரேடியோ டைரக்டர் இரகுராமனுடைய உதவியால், மாதம் மூன்று சான்சாவது ஏற்படும், நூறு நூற்றைம்பது கிடைக்கும். சுகசாரீரம், "அடிக்கடி இந்தக் கச்சேரி வைக்கவும்" என்று, ரசிகர்களின் கடிதங்கள் பல வந்தன. இரகுராமன் இதைத் திறமையாக ஏற்பாடு செய்தார், மற்றவர்களுக்கு எப்படியோ; இரகுராமனுக்குக் கோமளத்தின் சங்கீதமென்றால், உயிர். கச்சேரிக்கு அரைமணி முன்னாலும், முடிந்து முக்கால்மணி நேரமும், கோமளத்தைப் புகழ்ந்து பேசுவான், "போங்க, ரொம்ப புகழறது நேக்குப் பிடிக்கல்லே," என்று ஆரம்பமான பேச்சு, இரண்டு மாதத்தில், "என்ன செய்யறது, நான் கொடுத்துவைக்கல்லே.......எனக்குன்னு வந்து சேர்ந்திருக்கே ஒரு பிரம்மஹத்தி........யாரானு பார்த்துடப் போறான்னு நேக்கும் பயந்தான்...ஆனா மனசு கேட்கறதா... ரொம்ப நேரமாயிட்டா ஆத்திலே தேடமாட்டாளா......உம்மை...... என்னைப்பத்திக் கவலைப்படாதிங்கோ..." என்ற அளவுக்கு வளர்ந்தது.

ஜோதிடர் ஜெகநாதாச்சார், 'ஏதோ, குடும்ப காலட்சேபத்தைக் கவனித்துக் கொண்டு வந்தார்—பல பெரிய இடத்துக்கு அவர் குடும்ப ஜோதிடர். ரேடியோ வருமானம், கோமளத்தின் அலங்காரச் செலவுக்கு.

சதானந்தம், M. A., B. L., ஆவதைப் பார்க்கும் பாக்யம் கிடைக்காமலே, தகப்பனார் காலமாகிவிட்டார். அவருடைய கதா காலட்சேபம், ஊரெல்லாம் பிரசித்தி, வருமானம் கட்டை; ஆகவே, சதானந்தம், கோமளத்தின் வீட்டிலேயே 'வாசம்' செய்ய நேரிட்டது. தொல்லைதர, கோமளத்துக்குக் கூடப்பிறந்தவர்கள் இல்லை.

"எத்தனை நாளைக்கு இப்படி ஒரு வேலையுமில்லாமல் இருப்பது. உமக்கோ, வக்கீல் வேலை துளியும் சரியில்லை. வேறு ஏதாவது பார்த்தாகணும். உத்யோகம் புருஷ இலட்சணம்னு சும்மாவா பெரியவா, சொல்றா" என்று கோமளம் அடிக்கடி குத்துவது, சதானந்தனுக்கு வருத்தமாகக் கூட இருந்தது; ஆனால் என்ன செய்வது, அவள் சொல்வதிலும் தப்பு இல்லை, என்று எண்ணி மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டார்.

*

"நிருபர் வேலைக்கன்னா, ஆள் தேவைன்னு போட்டிருக்கு?"

"ஆமாம்...பின்னே, வக்கீல் வேலைக்கு ஆள் வேணும்னா போடுவா? நீர் வேணுமானா, விளம்பரம் போடும், கேஸ் தருவதற்கு ஆள் வேணும்னு..."

"நிருபர் வேலையா இருந்தாலும் பரவாயில்லை' ஒத்துக் கொள்ளலாம்னு சொல்றயா..."

"தர்ராளான்னு போயி கேளும், ஒத்துக்கறதா, இல்லையான்னே, யோசனை வருதோ உமக்கு. ஏன்னா, இப் ஜில்லாஜட்ஜிவேலையிலேன்னா இருக்கீர்..."

"ஏண்டி இப்படி மானத்தை வாங்கறே......எங்காவது கண் காணாத்தேசத்துக்காவது போய்த் தொலைக்கலாம்னு பார்த்தா, உங்க அப்பா எனக்கு 'ஜல தோஷம்' இருக்கு என்கிறார்..."

"அமிர்தாஞ்சனம் போடுமே ஜல தோஷம் போயிடறது..."

"குறும்புக்காரி, ஜலதோஷம்னா' சமுத்திரத்தைத் தாண்டுகிறபோது, ஆபத்து என்கிற அர்த்தத்திலே சொன்னேன். சரி, இப்ப, அந்த 'சுக்கிரன்' ஆபீஸ் ப்யூன் வேலைக்குப்போகச் சொன்னாலும், போறேன். நோக்கு எதுக்கு விசாரம்..."

"இதோ பாருங்கோ, இப்ப நிருபர் வேலைன்னு சொல்றா. அதிலே—வேலை செய்து, அனுபவம் ஏற்பட்டா, 'எடிடரா' வேலைபார்க்கப் படாதோ. நேக்கு முதல்லே B-கிளாஸ் சான்சுதான் ரேடியோ

விலே கொடுத்தா — இப்ப பாருங்கோ, A-கிளாசிலே இருக்கேன்......அப்படித்தான்"

"ஏண்டி, உன்னோட அதிர்ஷ்டம் யாருக்கு வரும். இரகுராமன் சொல்றானே, நீ பாடவரல்லேன்னா, ரசிகர்களோட கடுதாசி கட்டுக்கட்டா வர்ரதாமே......"

"அவாளுக்கென்ன......அப்படித்தான் பேசுவா......நேரேபோயி 'சுக்கிரன்' ஆபீசிலே பார்த்துவிட்டு வாரும்..."

"அப்ளிகேஷன் போடச்சொல்லி இருக்கே......"

"அப்படித்தான் போடுவா, நீங்க நேரிலேயே போய்ப்பாருங்கோ. எடிடர் நம்ம ஏமலதாவோட மச்சினன் தானே...தெரியாதோ......"

"எந்த ஏமலதா?"

"எத்தனை ஏமலதாவைத் தெரியும் உமக்கு. எச்சூரா வீட்டு ஏமு வைத்தான் சொல்றேன்......"

*

"கோமளத்தோட ஆத்துக்காரரா, ரொம்பச்சந்தோஷம். என்னாலானதைச் செய்யறேன். ஆனா, இந்தப் பத்திரிகை முதலாளி இருக்கானே 'மேனாவானா' மகா லூஸ். அவன் நிருபர் வேலைக்கு ஒரு பரீட்சை வைத்துத்தான் சேர்த்துக்கொள்ள வேணும்னு, கண்டிப்பாச் சொல்லிவிட்டான். நீர் M. A., B. L-ன்னு சொல்லலாம், ஆனா அவன், நமக்கு வக்கீலும் டாக்டரும்ஏன்சாமி; நமக்குத்தேவை நிருபர்னு பேசுவன். இதோ பார்த்தீரா, இது 'மாருதி' பத்திரிகையிலே வந்த செய்தி. இதிலே இருக்கிற விஷயத்தை, நல்ல மெருகு கொடுத்து இரசமானதாக, எழுதிக்கொண்டு வாரும். அவருக்கு அது திருப்தியா இருந்தா, வேலை நிச்சயம். இல்லையானா, நான் ஒண்ணும் செய்வதற்கில்லை" என்று சொல்லி, மாருதி பத்திரிகையில் வெளிவந்த ஒரு துண்டுச் செய்தியைக் கத்தரித்துக் கொடுத்தார், சுக்கிரன் எடிடர். 'நமஸ்காரம்' கூறிவிட்டு, சோகமாக நடந்து வீடு வந்தார் சதானந்தம்.

இராதா சமேதா கிருஷ்ணா, எனும் பாடலை மனப்பாடம் செய்துகொண்டிருந்த கோமளத்திடம், சலிப்புடன், சதானந்தம், 'மாருதி' துணுக்கைக்கொடுத்து விஷயத்தைச் சொன்னார்.

**"நேற்றுப் பகல், திம்மப்ப செட்டியாரின் 'திருமகள்' மாளிகை திறப்பு விழா வைபவம் சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த பிரமுகர்களில், பெரியதெரு பெத்தன்னசெட்டியார் முக்கியமானவர். பெத்தன்ன செட்டியாரை, திம்மப்பர், அன்போடு வரவேற்று, கூட்டத்தில் 'சபாநாயகர்' போல உட்காரவைத்து, பக்கத்திலேயே நின்றுகொண்டு உபசாரம் செய்ததுடன், எல்லோருக்கும் முதலில், அவரை 'விருந்து' சாப்பிட அழைத்துச் சென்று, பக்கத்திலேயே இருந்து 'பரிமாறி' சாப்பிட்டானதும், பெத்தன்னருக்கு அவசரமான 'ஜோலி' இருந்ததால், அவர் புறப்படவே, தெருவரையில் சென்று, காரில் அவர் ஏறியானதும், கதவைச் சாத்தி, கைகூப்பி நமஸ்காரம் செய்த காட்சி பிரம்மானந்தமாக இருந்தது, பெத்தன்ன செட்டியார் போன பிறகுதான், திம்மப்பர், மற்றவர்களை முறைப்படி உபசரித்தார்."**

கோமளம் ஒரு முறைக்கு இருமுறை இதைப் படித்துப் பார்த்துவிட்டு "இதை என்ன செய்யணுமாம்" என்று கேட்டாள். "வேறு தினுசா—சுவையா எழுதணுமாம்." என்று அக்கரையற்றுச் சொன்னார் சதானந்தம். போய் உட்கார்ந்து எழுதும் என்றாள், மறுக்காமல் சென்று எழுதலானார். நேரம் ஆக ஆக, அவர் கிழித்துப் போட்ட காகிதம் குவிந்ததே தவிர காரியம் முடியவில்லை.

வழக்கமாக வருகிற கோபம் கூட வரவில்லை, கோமளத்துக்கு, சதானந்தம் படுகிற சிரமத்தைப் பார்த்து.

"சரி! மண்டையைப் போட்டுக் குழப்பிக்கொள்ளவேணும். நான் இதுக்கு ஒருவழி கண்டு பிடிக்கறேன்" என்று கோமளம் சொன்னதும், சதானந்தம்முகமலர்ச்சியுடன், "நானே உன்னோடு சொல்லலாம்னு இருந்தேன். இரகுராமனைக் கேட்டுப்பாரேன். அவனுக்கு இதிலெல்லாம் சாமர்த்தியம்னு சொல்றா" என்றார்.

"இரகுராமனோட சாமர்த்தியம் யாருக்கு வரும். பலே ஆசாமி" என்று சொல்லும்போதுதான், கோமளத்தின் இதழில் அப்படிப்பட்ட ஒரு அழகு துள்ளும் என்பதைச் சதானந்தம் தெரிந்து கொண்டார். அசடு வழிந்தது முகத்தில், அருகே நெருங்கினார். "போதும், வாலிபம் திரும்பறதோ" என்று கேலிபேசிவிட்டுக் கோமளம், 'மாருதி'யை எடுத்துகொண்டு நேரே, இரகுராமனுடைய 'தோட்ட வீடு' சென்றாள். அவன் ஒண்டிக் கட்டை, அன்று ஆபீசில் லீவு வேறு. ஒரு அரைமணி நேரம் இராக ஆலாபனை, தாளவரிசை, ஆவர்த்தனம் ஆனபிறகு, கோமளம் ஆரம்பித்தாள்.

"சுக்கிரன்' பத்திரிகையிலே உமக்கு யாராவது தெரியுமோ?"

"முதலாளியே தெரியும். நான் தானே அதிலே சங்கீதப்பகுதி எழுதுவது, புனைபெயரில், 'பிருங்கி'ன்னு இருக்கும்"

"ரொம்ப நல்லதாப் போச்சு. இதோ பாரும்......"

"இது 'மாருதி'...ஆமாம், இதிலே இருக்கிறது என்ன?"

"திம்மப்பன் விருந்திலே பெத்தண்ணனுக்கு உபசாரம் நடந்த சேதி இருக்கே. இதை, வேறு தினுசா, சுவையுள்ளதா, எழுதித்தர வேணுமாம்...தந்தா, ரிபோர்ட்டர் வேலை தருவாளாம்..."அதை" அப்ளிகேஷன் போடச்சொல்லி இருக்கேன்......"

"அப்படியா, இந்த 'நியூசை' எடுத்துக் கொடுத்ததிலே, என்னமோ சூட்சமம் இருக்கு, என்னவாயிருக்கும்......"

"தேர்த்தம் சாப்பிடறேளா ரொம்பக்களைப்பா இருக்காப்போலிருக்கு......"

"நேக்கென்ன களைப்பு...உனக்கு வேணுமானா, சூடா காபி......ஓவல்........"

"இல்லை, இல்லை, இப்பல்லாம், உமக்குக் களைப்பு வந்துடறது..."

"அப்படியா சொல்றே...இதோ இரு......."

"முதல்லே, இதுக்கு ஒருவழி கண்டுபிடியும்..........விளையாட்டுப் பிள்ளைமாதிரியா போது ஓட்டப்படாது......"

"உத்தரவு மகாராணி......!"

*

"நீண்டநேரம் இரகுராமன்யோசித்தான்; கண்களிலே புத்தொளி தோன்றிற்று, "ஆஹா! கண்டு கொண்டேன்! சூட்சமம் தெரிந்துவிட்டது," என்றான். கோமளம். அருகே சென்று ஆவலுடன், என்ன? என்ன? என்று கேட்டாள்,

"சதானந்தத்துக்கு வேலை நிச்சயம். ஒரு ஐந்து நிமிஷம்" என்று கூறிவிட்டு, மளமள வென்று எழுதலானான்.

*

"பலே! பலே! கூப்பிடு அந்த ஆளை" என்று 'சுக்கிரன்' முதலாளி

சந்தோஷத்துடன் கூவினர். கூச்சத்துடன் எதிரே வந்து நின்ற சதானந்தத்தை முதுகில் தட்டிக் கொடுத்து,

"பலே! பலே! சரியான மூளை உமக்கு, இப்படி எழுதியல்லவா, மட்டந்தட்டவேண்டும். மாதம் மூணு நூறு சம்பளம். இனி பெத்தண்ண செட்டியின் நடவடிக்கை பூராவும் கவனித்து, 'ரிபோர்ட்' எழுதவேண்டியது மட்டும்தான் உம்ம வேலே, ஆர்டர் போட்டு, அட்வான்சு கொடும்" என்று கூறிவிட்டு, நாற்காலியில் ஆனந்தத்தாண்டவமாடினர். எடிடர், அப்போதுதான் சதானந்தம் கொண்டுவந்து கொடுத்த ரிபோர்ட்டைப் படித்தார். அது, இது.

திம்மப்பருடைய 'திருமாளிகை' திறப்புவிழா வைபவத்தில், ஊரிலே உள்ள எல்லாப் பிரமுகர்களும் வந்திருந்தனர். திருஷ்டிபரிகாரம் போல, பெத்தண்ண செட்டியாரும் வந்தார். அவரைக் கண்டதும், எங்கே பெத்தண்ணன் மற்றவர்களுடன் பேசி ஏதாவது கலகமூட்டி விடுகிருரோ என்று பயந்த திம்மப்பர், அவரை, யாருடனும் சேர ஒட்டாமல் தடுப்பதற்காக கூடத்தில், தன் கண்பார்வையிலே உட்காரவைத்திருந்தார். 'சாப்பாட்டுராமன்' இந்த பெத்தண்ணன் என்று தெரிந்து, முதலிலே, சோறு போட்டுத் தொலேத்துவிடலாம் என்று, உள்ளே இழுத்துக் கொண்டுபோய், சமயற்காரர்களைச் சரிப்படுத்திக்கொண்டு, கண்டபடி பலகாராதிகளைத் தின்று தீர்த்துவிடப் போகிருர் என்று திம்மப்பர், தானே 'அளவோடு' பரிமாறி, மேலும் அங்கே இருந்தால், பலருக்குச் சங்கடமாகவும் வெறுப்பாகவும் இருக்குமென்று பயந்து, பெத்தண்ண செட்டியாரை, வந்த வேலே முடிந்துவிட்டது, வயிறு வெடிக்கச் சாப்பிட்டான பிறகு இங்கு என்ன வேலே என்று கேட்பதுபோல, தெருவுக்குப் போகவைத்து, அங்கே மேலும் தாமதித்தால் என்ன செய்வதென்று யோசித்து, தானே, மோடார் கதவைத் திறந்து, பெத்தண்ணச் செட்டியாரை உள்ளே தள்ளி, டிரைவருக்குக் கண்ஜாடை காட்டி ஓட்டும்படி செய்து, கார் புறப்பட்டதும் தொலேந்தது சனியன்என்று ஒரு 'கும்பிடு' போட்டுவிட்டு, இனி நிம்மதியாக இருக்கலாம் வாருங்கள் என்று பிரமுகர்களை அழைத்து அன்புடன் உபசரித்தார்.

*

"கோமு, இந்த பெத்தண்ண செட்டிக்கும் 'சுக்கிரன்'செட்டிக்கும் நீண்டகாலமாக விரோதம். இது எனக்குத் தெரியும். நீகூடக்கேள்விப்பட்டிருப்பே, மல்லியூர் அல்லின்னு ஒருத்தி சுமாராப் பாடுவ, அவ, இந்த சுக்கிரனேடு இருந்தா; பெத்தண்ணன் அவளே 'வலே' போட்டுப் பிடிச்சுண்டான்; அதிலே பகை வளர்ந்தது. அவ இங்கே பாடவருவா, என்னண்டெ தாராளமாப் பேசுவ, அதனலே எனக்கு விஷயம் தெரிஞ்சுது 'மாருதி' பத்திரிகை பெத்தண்ணனுக்கு வேண்டியவா நடத்தரு. அதனலே, அவன் விருந்துக்குப் போனதைப் பிரமாதப்படுத்திப் போட்டிருந்தா. அதை மாத்தி எழுதச் சொல்லி 'பரீட்சை' வைத்திருக்கு...சரி, சூட்சமம் இதிலே இருக்குன்னுதான், நான் பெத்தண்ண செட்டியை அவமானப் படுத்தர மாதிரியா, அதே 'நியூசை' புதுதினுசா எழுதினேன் பலிச்சுது. சதானந்தத்துக்கு வேலே கிடைச்சுது." என்று இரகுராமன் விளக்கினன்.

கோமளம் களிப்படையவில்லே; முகம் சுளித்துக்கொண்டாள்.

"மல்லியூர் அல்லியோட சிநேகம் இப்போதும் உண்டா?" என்று கேட்டாள்.

"பைத்யமே! பைத்யமே! அவ, எனக்குப் பாட்டிபோலன்னு இருப்பா, நாற்பது இருக்கும் வயசு" என்று கூறிவிட்டு, கோமளத்தின் கோபத்தைப் போக்கும் வேலேயில் ஈடுபடலானன்.

★




காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.